வாரப் பத்திரிகை 25-6-39




## முக்கிய விஷயங்கள்

ஒளி

—ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி

வாழ்க்கைப் பருவங்கள்

—ஸ்ரீ கே. வி. எ. சங்கரலிங்கம்

உயர்வு மனப்பிராந்தி

—ஸ்ரீ வி. எஸ். ராமகிருஷ்ணன்

இரட்டிப்புக் கூலி

—ஸ்ரீ வி. பாலசுப்ரமண்யம்

பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான்

—ஸ்ரீ த. கிருஷ்ண

காரியாலயம் : 312, தம்பு செட்டித் தெரு, சென்னை

தனிப்பிரதி— ஒரு அணா

வருஷ சந்தா ரூ. 4.

THE BHARATAMANI (Tamil Weekly)

2, Thambu Chetty St., Madras.

Editor :
K. S. VENKATARAMANI

HIGGINBOTHAMS

# நீங்கள் வாசிக்க!

| | ரூ. | அ. |
|---|---|---|
| இரட்டை மனிதன் (ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் பி.ஏ. மொழி பெயர்ப்பு) | 0 | 8 |
| விஷ விருக்ஷம் (ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி பி.ஏ. மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| துர்க்கேச நந்தினி (ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் பி.ஏ. மொழி பெயர்ப்பு) | 1 | 4 |
| எல்லோரும் ஓர் குலம் (ஸ்ரீ ப. ராமஸ்வாமி) | 0 | 8 |
| முருகன் ஓர் உழவன் (ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| தேச பக்தன் கந்தன் (ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி எம். ஏ., பி.எல்.) | 1 | 0 |
| ஜேக்கோஸ்லோவேகியா (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா) | 1 | 0 |
| மாகாண சுயாட்சி (ஸ்ரீ ஏ. என். சிவராமன்) | 0 | 8 |
| ஆண்டு நிறைவு (வ. ரா.) | 0 | 2 |
| ஹிட்லர் (...மிநாத சர்மா) | 2 | 4 |
| ...பி (... ப. ராஜகோபா... கோ. சுந்தரராஜன்) | 0 | 6 |
| கெமால் அத்தாதுர்க் (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா) | 1 | 8 |
| சக்தன்க்காவடி (ஸ்ரீ தி. ஜ. ர.) | 0 | 8 |
| மாயா விநோதினி (ஸ்ரீமதி தஞ்சம் மொழி பெயர்த்தது) | 1 | 8 |
| ரஜனி (ஸ்ரீ எஸ். குருஸ்வாமி மொழி பெயர்ப்பு) | 0 | 12 |
| மாதங்கினி (ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி மொழி பெயர்ப்பு) | 1 | 0 |
| ஹேமலதா | 1 | 4 |
| இந்திரா (ஸ்ரீ எஸ். குருசாமி மொழி பெயர்ப்பு) | 0 | 12 |
| உலகத்துச் சிறுகதைகள் (புதுமைப் பித்தன் மொழி பெயர்ப்பு) | 1 | 0 |
| முக்கிய அரசியல் திட்டங்கள் (ஸ்ரீ ந. ரா. சுப்பையர்) | 1 | 8 |
| காவ்யங்கள் (மகாகவி பாரதியார்) | 2 | 8 |
| குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி பெயர்த்தது) | 1 | 8 |

(ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்ப வேண்டும்)

**சுவேதாரண்ய ஆச்ரமம்,**

312, தம்பு செட்டித் தெரு,

**சென்னை.**

பாதுகாக்கிறது

பகலும்



இரவும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - NOV 1939
MADRAS

நாற்பது வருஷங்களாகப் பிரசித்திபெற்ற அமிர்தாஞ்சனம்

குற்றமில்லாத
தோற்றத்திற்கு

மைசூர் சந்தண சோப்
பைப்போல் நல்லது
வேறொன்றுமில்லை

அதை உபயோகித்தால் சருமம்
வெண்மையாயும் மிருதுவாயும்
ஆகிறது.



MYSORE
Sandal
SOAP
GOVT. SOAP FACTORY, BANGALORE.

மைசூர் சந்தண சோப்.

ஈரல்குலைக் கட்டிகளுக்கு

ஜம்மி

வெங்கடரமணய்

யாவின்

லிவர் க்யூர்

நிச்சய நிவாரிணி




JAMMI VENKATARAMANAYYA'S

Liver Cure

REGD



# தாய்ப் பால்

குழந்தைகளுக்கு அவசியம்

உங்கள்
கூந்தலுக்கு



விலை அணா 12.

# கெஸ்ரைன்

அவசியம்

கூந்தலழகைப்பெற ஒரு முறை
வாங்கி பரீக்ஷை செய்யுங்கள்.

## விக்டோரியா டிபோ

வடக்கு மாடவீதி,

மைலாப்பூர், :: சென்னை.

# மயர்ஸ் பம்புகள்

உலகப் பிரசித்திபெற்றவை




அநேக விதமான
கைப் பம்புகள்
பவர் பம்புகள்
ஸ்பிரே பம்புகள்

எவ்விதமான ஜலப் பிரச்னையையும்
தீர்க்கக்கூடியவை.

மற்றும் ஸ்டோவர் கெரஸின்
& க்ரூடாயில் என்ஜின்கள்,
விண்டு மில்கள்.

விவரங்களுக்கு எழுதுங்கள்.

இந்தியாவின் ஸோல் ஏஜண்டுகள்:

**வாடர்ஸ் ஸப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்,**

தபால் பெட்டி 202, :: 1-173, பிராட்வே, மதராஸ்.



# பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

**திருவண்ணமலை (N. A. Dt.)**

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டீயூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

**சீப் மெடிகல் ஆபீசரான ராவ்சாகேப் ஸ்ரீ..................................**
**"..............M. B. & C. M. அவர்கள் எழுதுகிறார் :— 15—2—39**

ராமச்சந்திரபுரம் ஸ்ரீ. சித. அ. சாமினாதன் செட்டியாரவர்கள் நீண்ட காலமாக கடுமையான மது மேகம் என்ற நீரழிவு ரோகத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அநேகம் டாக்டர்களிடம் மருந்து உட்கொண்டும், பலன் ஏற்படவில்லை என்பது எனக்கு நன்ருய்த் தெரியும். பிறகு, திருவண்ண மலை சித்த ஔஷத ஆசிரமம் ஸ்ரீ எஸ். பரசுராம ஐயரவர்களிடம் இரண்டு மாதம் மருந்து உட்கொண்டு, யாதொரு பத்தியமும் அனுஷ்டிக்காமல், அரிசி உணவு சாப்பிட்டு வந்தபோதிலும், இப்பொழுது நீரிலுள்ள சர்க்கரை பூராவாக நீங்கிவிட்டது. செட்டியாரவர்கள் இப்பொழுது பலிஷ்டராயும் ஆரோக்கியமுடையவராயும் இருக்கிருர் என்று நான் சர்ட்டிபை செய்கிறேன். ஸ்ரீ பரசுராம ஐயர் அவர்களின் நீர் ரோக மருந்து விசேஷம் அமைந்ததாய் இருக்கின்றது."

இதர விபரங்களுக்கு மேல்கண்ட திருவண்ணமலை சித்த ஔஷத ஆசிரமத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

# இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு தலைமை ஆபீஸ் :- மாயவரம்

சென்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ரூ. | 25,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... ரூ. | 17,54,368 |

சென்னை ஆபீஸ்கள்

ஆர்மீனியன் தெரு, சைனா பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர், திருவல்லிக்கேணி.

டைரக்டர்கள்

ஸ்ரீ டி. ஆர். வேங்கட்டராம சாஸ்திரிகள், சி.ஐ.இ.
ஸ்ரீ என். வி. ராகவன், (மாஜி அகவுண்டண்டு ஜனரல்).
ஸ்ரீ வி. வெங்கடராமய்யர், எம்.ஏ., பி.எல்.
ஸ்ரீ ஆர். விஸ்வநாதய்யர், பி.ஏ., பி.எல்.
ஸ்ரீ கே. சிவஸ்வாமி ஐயர்.
ஸ்ரீ கே. சுப்பய்யர்.
ஸ்ரீ ஆர். எஸ். யே. சங்கரய்யர்.
ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்,
(மானேஜிங் டைரக்டர்)



# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 2 | ஞாயிறு 25-6-39 பிரமாதி௵ ஆனி௴ 11௳ | முத்து 13 |
|---|---|---|


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| அடிமை நாட்டின் அரசியல் நாடி | ... ... ... ... ... | 384 |
| குறிப்பு | ... ... ... ... ... | 387 |
| போகிற போக்கில் | ... ... ... ... ... | 388 |
| ஒளி | ... ஸ்ரீ. கே, எஸ். வேங்கடரமணி | 391 |
| நாள் | ... ... ... ஸ்ரீ ராஜப்பா | 394 |
| வாழ்க்கைப் பருவங்கள் | ... ஸ்ரீ. கே. ஸி. ஏ. சங்கரலிங்கம் | 395 |
| பிரிட்டன், ஜெர்மனி ஜப்பான் | ... ... ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி | 397 |
| நிரபராதி | ... ... ஸ்ரீமதி ஸி. ஸத்யவதி | 399 |
| உயர்வு மனப்பிராந்தி | ... ஸ்ரீ. வே. சு. ராமகிருஷ்ணன் | 403 |
| இரட்டிப்புக் கூலி | ... ஸ்ரீ. வி. பாலசுப்ரமண்யம் | 407 |
| சிறுவர் பகுதி | ... ஸ்ரீ. எஸ். எல். நாராயணன் | 410 |
| வலைவீச்சு | ... ... ... ... ... | 412 |



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# அடிமை நாட்டின் அரசியல் நாடி

சரீரத்தின் வலுவை சோதித்துப் பார்க்க வேண்டுமென்றால் ஹிருதயத்தின் மேல் விரலைவைத்துப் பார்க்கிறோமா? கையை யல்லவோ பிடித்து தாது பார்க்கிறோம். வாதநாடி மான்குட்டிபோல் சுகமாய் துள்ளி விளையாடி ஓடினால், 'பேஷ வாதத்தின் ஓட்டம் நன்றாயிருக்கிறது. தாது புஷ்டி யாயிருக்கிறது. குறைவில்லை, சுகமுண்டு, நல்ல சரீரம்' என்று களிப்புடன் கூறுகிறோம்.

அப்படியேதான் ஒவ்வொரு தேசத்திற்கும் வாழ்வு சுகத்தையும், மேன்மையையும் அறிய வாதநாடி உண்டு. அந்த வாதநாடியின் குறியும் சுக ஓட்டமும் அன்னிய தேசத்தின் நடவடிக்கைகளில் அது பெரும் மரியாதைதான் ஓர் முக்கியமான அளவாகும். தாய் தேசத்தின் சக்தியையும், வலுவையையும், கௌரவத்தையும் காட்டும் நாடி இதுதான். தாய் தேசத்திலிருந்து அந்த அன்னிய தேசத்தில் குடியேறி யிருக்கிறவர்களிடம் அன்னியர் வைத்திருக்கும் மரியாதைதான் தாய் தேசத்தின் மதிப்பிற்கு அளவு.

இதற்கு முக்கியமான உதாரணம் பிரிட்டிஷ் ராஜ்ய பரிபாலனமே. தற்சமயம் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் பிரிட்டிஷ் சிங்கம் வாலைக்குழைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் ருஷ்யக் கரடியைக்கண்டு நண்பரோ, விரோதியோ வென்று அறிய முடியாமல் பார்த்துக் கொண்டு நின்றாலும், சென்ற நூற்றாண்டில் பிரிட்டிஷ் சிங்கமே சிங்கம்! பெட்டியை முதுகில் போட்டுக்கொண்டு கண்ணாடி, சீப்பு முதலிய சில்லறைச் சாமான்கள் வியாபாரம் செய்துகொண்டு வந்த சொல்ப வியாபாரிகூட 'பிரிட்டிஷ் ஸிடிஸனாக' இருந்தால் அவர் எக்காட்டிலிருந்தாலும் சரி, அன்னிய நாட்டில் அவருக்கு அளவில்லாத மரியாதையுண்டு. அவர் தும்பினால் லண்டனுக்குத் தந்தி போய் விடும். வாழைப்பழத் தோலில் சருக்கி அவர் பெட்டியுடன் கீழே விழுந்தால் 36-வது எஸெக்ஸ் ரெஜிமெண்ட் உடனே கப்பலேறிவிடும். பார்லிமெண்டில் கிழச் சிங்கம் கர்ஜிக்கும். சைனாவில் மான்குட்டிகள் உயிருக்குப் பதறும். இப்படிப்பட்ட சிங்கம் தற்கால நெருக்கடியில் இப்பொழுது வாலைச் சுருட்டி மடியில் வைத்துக்கொண்டு முழங்கால் தேய நமது பீபில்ஸ் பார்க் சிங்கம்போல் யார் பட்டாணிக்கடலை போடப்போகிறார்களென்று உட்கார்ந்து கொண்டிருக்கிறது. பிரதம மந்திரி சேப்பர்லின் தன் பழைய பட்டுக் குடையை (அப்பீஸ்மெண்ட்) அதின் வாயில் கொடுத்திருக்கிறார். அதை நாய் போல் கவ்விக்கொண்டு கர்ஜிக்கக்கூட இடமில்லாமல் துடித்துக்கொண்டு டௌன்ட்ஸ்ஸின் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசியல் தகவல் நமக்கென்ன? போகட்டும்.

இந்த நாடி சாஸ்திரப் பிரகாரம் நம்முடைய புண்ணிய பூமி—கங்கை, யமுனை கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, ஓடி போஷிக்கும்—பாரத நாட்டின் தற்கால நிலைமையைச் சற்றுக் கவனிப்போம். வெளியூரில் குடியேறி கஷ்டப்பட்டு வேலை செய்து பிழைக்கும் நம்மவரின் தற்கால நிலைமையைப்பற்றி நாம் நினைக்கும் பொழுது உள்ளம் உருகுகிறது. கொடுமை சகிக்சமுடியவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பித்தலாட்டத்தின் உண்மை வெளி வருகிறது. ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த அன்னிய நாட்டில் அகப்பட்டிருக்கும் இந்தியர்களின் நிலைமைதான் இன்னும் கேவலம். இதை கவனிப்போம். நமக்கு அருகாமையிலுள்ளதும், நமது சரித்திரம் தோன்றினநாள் முதல் இந்தியாவோடு சேர்ந்திருந்து பல நூற்றாண்டுகளாக இந்-

தியர்களின் கூலிவேலையாலும் உழைப்பாலும் செல்வப் பெருக்கை யடைந்த சிலோன் தீவை முதல் முதல் பார்ப்போம். அவ்விடத்தில் தேயிலைத் தோட்டத்தில் பாடுபடும் கூலியின் கதி நமது பண்ணையாளின் கதியை விட 10 மடங்கு கேவலமாயிருக்கிறது. தவிர சமீபத்தில் சர்க்கார் உத்தியோகத்தில் சில்லறை வேலைகளில் அமர்ந்திருந்தவர்களில் எண்ணாயிரம் பேர்கள் விலக்கப்பட்டு அவர்கள் தங்கள் குடும்பத்தோடு திரும்பும் படியாக ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் கேள்வி முறையில்லை. ஆனால் காட்டாமணக்குப் போல் அபரிமிதமாய் விளையும் தேங்காய்களையும், கட்டை முட்டைகளையும் லக்ஷக் கணக்காய் நமது விவசாயச் செல்வம் அழியும்படியாக சிலோனிலிருந்து கொண்டுவந்து இந்தியாவில் தாராளமாய்த் தள்ளுகிறார்கள். இதற்குப் பதிலாக இப்பொழுது நாம் எழுத்துக்கூலிக்காகப் பத்து ரூபாய் சம்பளத்திற்குக்கூட ஒருவரையும் அனுப்பமுடியாது.

எங்கும் இதே கதைதான். நமது நாடு, கன்னியாகுமரி முதற்கொண்டு ஹிமவத் பர்வதம் வரையில் எங்கும், எல்லோரும், கேள்வியன்னியில் நுழையக்கூடிய சத்திரம். பிறர் நாடு நாம் சம்பந்தப்பட்ட வரையில் அவரவர்கள் சொந்தக் கோட்டை. நாம் காலடி வைத்தால் 'கல்தா' கொடுக்கப்படுவோம். என்ன நியாயம், என்ன பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், என்ன தர்மராஜ்ய பரிபாலனம்! இப்படி அமைந்துள்ள ஏகாதிபத்தியத்தில் சேர்ந்து நாம் நிற்பது பண்டிட் ஜவஹர்லால் நேரு அடிக்கடி சொல்வதுபோல் நமக்கு க்ஷேமக்குறைவு, தலைதூக்க முடியாத அவமானம்.

பர்மாவிலும் இதே கதைதான். நமது உழைப்பிற்கும் செல்வத்திற்கும் இதே கதிதான். நாம் பர்மாவில் எண்பது கோடி ரூபாய் முதல் போட்டிருக்கிறோம்—முக்கியமாய் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள். நாம் ஓடிவந்து விடுவோமென்றாலும் போட்ட பணத்தை திருப்பியெடுக்க வழியில்லாமல் சர்க்கார் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் பர்மா நம்மிடம் 15 கோடி ரூபாய் லாபத்திற்கு வியாபாரம் செய்து பிழைக்கிறது. இதற்குப் பிரதியாக அதற்குத் தடை போட்டாலென்ன நமது சர்க்கார்? மலேயா நாட்டிலும் இதே கதிதான்.

இப்பொழுது தென் ஆப்பிரிக்காவில் நமது வாழ்வைப் பார்ப்போம். 10 போயர்கள் சேர்ந்து ஏராளமான பிரதேசத்தை கட்டிக்கொண்டு செய்யும் அட்டகாசத்தை நாம் கண்கொண்டு பார்த்துச் சகிக்க முடியாது. அதற்கு எல்லையே கிடையாது. சாட்டையை எடுதது அடித்து சமுத்திரத்திற்குள் அங்கிருக்கும் இந்தியர்களை விரட்டாததுதான் தோஷம். அதற்காக இந்த அபராதம். 100 வருஷங்களாக நெற்றி வேர்வை நிலத்தில் சொட்டப் பாடுபட்டு ஆப்பிரிக்கா காட்டை ஆரஞ்சுத் தோட்டமாய் நாம் செய்து கொடுத்ததற்கு அபராதம். போயர் அரசியலில் இட்ட வார்த்தைக்கு மரியாதைகிடையாது. கையெழுத்துப் போட்ட ஒப்பந்தத்திற்கு மதிப்புக் கிடையாது. எல்லாம் பொய், பித்தலாட்டம். நெம்பர் 10, டௌனிங் தெருவில் பிரிட்டிஷ் மந்திரி சபை இதையெல்லாம் ஆமோதித்து நடவடிக்கை நடத்துகிறார்கள். 1927-ம் வருஷத்து கேப்டௌன் ஒப்பந்தந்தான் என்ன? நமது ஏஜண்ட் பதவி பட்டங்கட்டின கங்காணி வேலைதானே? அதுவும் எதற்காகக் கங்காணி? வீடு வாசலுடன் குடியேறி கஷ்டப்பட்டு உழைத்து காலந்தள்ளி வருபவர்களைப் பொய் வார்த்தை சொல்லிப் பயமுறுத்தி தாய் தேசத்திற்குத் திரும்பிப் போகச் சொல்லவேண்டிய கங்காணிதான். எதைச் சகித்தாலும் சகிக்கலாம். இந்த போயர் அட்டகாசத்தை சகிக்க முடியாது. இது அரசியலல்ல, 'ஹிட்லரிஸம்' தான். விரட்டியடிக்கப்பட்ட யூதர்கள் கதி தேவலை.

மோர்சிலும், பிரிட்டிஷ் கயானாவிலும் மறுபடியும் இதே கதைதான். படிக்குப் பாதி அந்த தேசத்தில் இந்தியர்களே குடியேறியிருக்கிறார்கள். இவர்கள் உழைப்பால் அந்த தேசத்து மண்ணைப் பொன்னாக ஆக்கியிருக்கிறார்கள், ஆனாலென்ன? அவர்கள் நிலைமை அடிமைக்கும் கீழ்தான்.

இந்தியர்கள் குடியேறியிருக்கும் இடமெல்லாம் பிஜி முதற்கொண்டு பிரிட்டிஷ் கயானா வரையில் ஒரே கதைதான். அன்

னிய நாட்டில் நமக்கு எவ்விதத்திலும் ஒரு விதமான உரிமைகளும் கிடையாது, பொருளாதார முறையில் நமக்குக் கேவலம் உழைத்துக் கூலி வாங்கி ஜீவனம் செய்யும் முறையைவிட உயர்ந்த வழியும், உரிமையும் கிடையாது. அரசியல் முறையில் கேட்கவே வேண்டாம். நாம் அடிமைக்கும் அடிமை, கை கட்டி எட்டு மணி உழைத்தால் அன்று வயிற்றை வளர்க்க சொற்பச் சம்பளம் வாங்கலாம். எஜமான் போவென்று சொன்னால், குச்சைப் பிரித்துக் கொண்டு போகத்தயாராகஇருக்கவேணும். ஈசனே, என் நமக்கு இந்த கதி அன்னிய தேசத்தில்! இந்திய நாகரீகமும், அரசியல் முறையும் ஒருநாளும் பிறரை யாண்டு அனுபவித்து அன்னிய தேசத்தை யடைந்து அரசாள வேணுமென்று ஆசைப்படவதில்லையே! கடலேறி அன்னிய தேசம் போனால் கோவிலைக் கட்டினோம், ஈசனைக் கும்பிட்டோம். நமது வேதாந்தத்தைப் பரவச் செய்தோம்.

ஹிட்லர் ஒரு ஜில்லாவை அடிமையாக்கியதற்குக் கூக்குரல் போடுகிறார்களே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தித்தில் எவ்வளவு அடிமைகள்? எவ்வளவு விதத்தில் அடிமைகள்? ஈசனே, இந்த அடிமைத்தனம் இவ்வுலகில் எப்பொழுது ஒழியும்? ஒருவர் பிறரை ஆளும் ஆசை! சூர்ய வெளிச்சம்போல், எல்லாத் தேசங்களும் எல்லோருக்கும் சொந்தமல்லவா? 10 பேர் சேர்ந்து முரட்டுத் தனமாய் ஏராளமான பூமியை வளைத்து வேலி போட்டு பீரங்கி ஏற்றி நீ அடி வைக்கக்கூடாதென்று சொல்வது என்ன நியாயம்? பீரங்கி நியாயம்தானே? இந்த அடிமைததனம் ஒழிய நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த தேசத்தைப் பிரிக்கும் முள்வேலியை ஒழிக்க வேண்டும். வகுப்பு வாதங்கள் தீரவேண்டும். பிளவுபடாமல் மனது ஒத்து ஆண்டவனிட்டபடி அன்புடனும் அவரவர்கள் கர்மாவை அவரவர்கள் செய்யவேண்டும். ஈசனிட்ட கட்டளை என்னவென்றால், பூமாதேவிக்கு மனுஷ்ய வர்க்கமெல்லாம் ஒரே குடும்பம. எல்லாம் எவருக்கும் தாய் நாடு. முள்வேலிபோட்டு ஒருவர் மற்றவரைத் தடுக்கும் பாத்யம் ஒருவருக்கும் கிடையாது மேல்நாட்டு நாகரிகம் தன் மனதை இந்த வழியிலேயே செலுத்துவதாய்த் தெரியவில்லை. ஏசு கிருஸ்துவை மூட்டை கட்டிவிட்டு இறுமாப்பிலாழ்ந்து அழியும் வழியைத் தேடுகிறது. கத்தியால் அன்னியரைக் குத்திப் பிழைப்பவன் மரமேறிபோல் அந்த வழியே நாசமடைவான் என்று இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்பே ஏசுநாதர் சொல்லியிருக்க வில்லையா? ஆட்டை அடிக்கும் புலிக்கு காடு அழிந்துகொண்டே வரும். ஆடு தங்கும், புலி போகும்.

கே. எஸ். வேங்கடரமணி.



குறிப்பு

# தொழில் திட்டம்

அகில இந்தியாவுக்கும் ஒரு கமிட்டியின் மூலம் தொழில் திட்டம் தயாரிப்பதென்பது எவ்வளவு பிரம்மாண்டமான காரியம் என்பது சமீபத்தில் அதன் கூட்டத்தில் நடைபெற்ற நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகிறது. இருநூறு நிபுணர்கள் அடங்கிய இருபத்தேழு தனிக் கமிட்டிகள் நியமனமாகப் போகின்றனவாம். இந்தத் தனிக் கமிட்டிகள் தங்கள் வேலைகளைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதென்பது சிலமாதங்களுக்குள் ஆகக் கூடிய காரியம் அல்ல; தேசியத் தொழில் திட்டக்கமிட்டி இவற்றின் முடிவுகளை ஆராய்ந்து ஒன்று படுத்தி ஒருபுதுத் திட்டம் தயாரிப்பதற்குப் பல வருஷங்கள் ஆகும் என்பதில் சந்தேகமில்லை.

அவ்வளவு காலமானாலும் வேலையாவது சரிவர நடக்குமா? அநேகமாக எல்லா மாகாண சர்க்கார்களும் (வங்காளத்தைத் தவிர) ஈடுபட்டிருப்பதாகப் பெயர்; ஆனால் சர்க்கார் உத்தியோக முறையில் நியமிக்கப்படாததால் இந்தக் கமிட்டியின் வேலையில் ஒவ்வொரு கூட்டத்திலும் தடங்கலும் தாமதமும் ஏற்படும். மத்ய சர்க்காரின் ஒத்துழைப்பு இல்லை. மாகாண சர்க்கார் மனப்பூர்வமாக ஒத்துழைத்தாலும் அகில இந்தியக் கமிட்டிக்கு அதிகமாக உபயோகமாக இருக்க முடியாது.

எனவே ஹிந்துப் பத்திரிகை கூறுவது போல் மாகாண சர்க்கார்கள் தாங்களே ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில் முன்னேற்றத் திட்டங்கள் போட்டு முடிவுகள் கூட்டி முடிவுகளை மத்தியக் கமிட்டிக்கு அனுப்பினால் அதன் வேலை எளிதாகும். வேலையும் துரிதமாக நடைபெற்று முடியும்; மாகாணங்களும் மத்திய கமிட்டியின் முடிவுகளை எதிர்பார்த்து தங்கள் முன்னேற்றத் திட்டங்களைத் தாமதத்தில் வைக்க வேண்டியதில்லை.

## வகுப்புவாதம்

ஹிந்தி எதிர்ப்பு என்ற வியாஜத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் இன்று ஒரு தீவிரமான வகுப்புவாத இயக்கமாக மாறிவிட்டது. ஆரிய—திராவிடர் என்ற ஒரு அர்த்தமற்ற பூசலைக்கிளப்பி காங்கிரஸ் எதிரிகள் நாட்டை இரண்டு படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஹிந்தி இல்லா விட்டாலும் வேறு எதையாகிலும் வைத்துக் கொண்டு இந்த இயக்கம் வலுக்கத்தான் செய்யும். காரணம் பதவி மோகம்தான்.

பதவி மோகம் என்பது கெடுதல் என்று நாம் சொல்ல வரவில்லை. காங்கிரஸ்தான் பதவி வகிக்க வேண்டும் என்று கூட நாம் சொல்லவில்லை. காங்கிரஸ் ஒரு திட்டத்தைக் கைப்பிடித்து நடத்த இன்று பதவி ஏற்றுக் கொண்டிருந்தால் ஜஸ்டிஸ் கட்சி (நீதிக் கட்சி!) மற்றொரு திட்டத்தைப் போட்டுக் கொண்டு பதவி பெற முயலுவது ஜனநாயக முறைக்கு யாதொரு வகையிலும் விரோதமல்ல; வேறுவிதமாகவும அதில் தப்பு ஒன்றுமே கிடையாது. முன்னேற்றத் திட்டமே ஒன்றும் இல்லாமல் காங்கிரஸை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு ஒரு வகுப்பைப்பற்றி மக்களின் மனதில் துவேஷம் கற்பிக்க முயலுவது நீதியுமல்ல முறையுமல்ல.

அடுத்த தேர்தல்களில் போட்டி போட ஜஸ்டிஸ் கட்சி இப்பொழுதே முஸ்தீபுகள் செய்கிறது. தென் இந்திய லிபரல் பெடரேஷன் கிளைகள் பல ஊர்களில் ஸ்தாபிக்கப் படுகின்றன. தாராளமாகச் செய்யட்டும். வகுப்பு வித்தியாசத்தில் அடைப்படை வைக்காமல் ஏதாவதொரு முன்னேற்றத் திட்டத்தில் அடைப்படைவைத்து அது ஸ்தாபிதமானால் நன்றாக இருக்கும்.

ஆனால் அக்கட்சியின் தலைவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லை. ஆகையால் நாட்டில் அதற்கு இடம் ஏற்பட்டால் வகுப்புத் துவேஷம் தலைக்கேறிவிடும். அதைத் தடுக்க காங்கிரஸ்காரர்கள் இந்த சமயத்தில் பகீரதப் பிரயத்தனங்கள் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். காங்கிரஸ் சர்க்கார் உடனே தொழிலாளர் சட்டத்தையும் நிலவரி சட்டத்தையும் இயற்ற வேண்டும். பெருவாரியான பொது மக்களின் தடுமாற்றத்தை உடனே நீக்கி நிம்மதி அளிக்க வேண்டும். மதுவிலக்கு நடக்க வேண்டியதுதான். அதன் பலன் ஒருபுறமிருக்க தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உடனே நிவாரணங்கள் ஏற்பட வேண்டியது அத்தியாவசியம். வரப்போகும் சட்டசபைக் கூட்டத்திலேயே இந்த மசோதாக்கள் வரும் என்று நம்புகிறோம்.




"என்ன மணி, கோடை லீவு இரண்டு மாதம் எடுத்துக் கொண்டு, ஹரித்வாரம், ஹிருகேசம் போய் கங்காஸ்நானம் செய்து விட்டு வந்தும் இன்னும் "பாரத மணி" யில் "போகிற போக்கு" வரவில்லையே? மறுபடியும் லீவு எடுத்து விட்டாயா? "போகிற போக்கில்" இல்லாத "பாரத மணி" நாக்கில்லாத மணி போல் இருக்கிறது. நல்ல வேளை உன்னை பிராட்வேயில் கண்டேன்."

இவர்தான் என் பழைய சிநேகிதர் கோபு! கொஞ்சம் "போகிற போக்கிலே" ஸ்தோத்திரம் செய்தால் அதிலிருந்து "யத்கிஞ்சித் ஹிரண்ய" மாவது கிடைக்காதா என்று நம்பும் கோஷ்டியைச் சேர்ந்தவர்.

"கோபு, உன்னைப் பார்த்ததே எனக்கு கங்காஸ்னான பலனென்று நம்புகிறேன். பேச்சைக் காய்ச்சிக் குடிக்கும் தொழில்களிலிருந்து ஜனிக்கும் பாபங்களை கங்காஸ்னானம் செய்து இப்பொழுதுதான் கழித்தேன். அதற்குள்ளே மறுபடியும் பழைய தொழிலை ஆரம்பிக்க வேண்டுமா? "போகிற போக்கி"லைத் தென்றல் காற்று தானே அடித்துக் கொண்டு போயிருந்தது. அதுவும் 'ஜில்' என்று தானே வீசிற்று. என் ஊருக்குப் போய் வெகு காலமாயிற்று. ஆகையால் அவ்விடம் போனேன். அப்பொழுதுதானே கங்காஸ்னானத்தின் பலனும் பூர்த்தி?"

தவிர காவேரி தீரத்தில் என் வயலிலே விளைந்த நெல்லில் கைக்குத்த லரிசியாய் ஒரு மூட்டை அரிசி கையோடு கொண்டு வந்து பட்டணத்தில் வைத்துக் கொண்டிருந்தால் சந்தாவையும், தபால்காரனையும் எதிர் பாராமல் "போகிற போக்கி"லை ஒட்டி எழுதி ஆனந்திக்கலாமே யென்று தான் என் ஊருக்குப் போனேன். கோபு, என் ஊர் எது வென்று உனக்குத் தெரிமா?— காவேரிப்பூம்பட்டினம். மன்னன் கரிகால சோழன் ராஜதானி. சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினத்துப்பிள்ளை பிறந்த இடம். மணல் முட்டில் இலக்கியப் பித்துத்தான். கேட்கவேணுமா?

மைசூர் பிரதேசத்தில் நான் அலைந்து, திரிந்துகொண்டிருக்கும் பொழுது சென்னையில் 110 டிகிரி உஷ்ண மென்று கேள்விப் பட்டேன். திரும்ப மனம் வருமா? மைசூர் மகாராஜா பிறந்த நாள் குதூகலத்தையும், பிருந்தா வனக் காட்சிகளையும் அநுபவித்த கண்களை உடனேயா கூவத்தில் கொண்டு வந்து நனைக்கிறது? தவிர பத்திரிகையில் பார்த்தேன். எதற்கும் அஞ்சாத ராஜாஜி கூட நீலகிரிக்குப் போய் உதகமண்டலத்தில் கொட்டும் மழையில் தானும் புயலுண்ட மழை போல் தன் மொழிகளை வாரி இறைத்தாரென்று கேள்விப்பட்டேன். 110 டிகிரி உஷ்ணத்தில் சென்னைக்குத் திரும்பும் பித்தன்கூட உண்டோ வென்று தீர்மானித்தேன். பத்திரிகை இலக்கியம், தலையங்கம்கூட இந்த உஷ்ணத்தில் இளகிவிடு மல்லவா? இப்படி ஆலோசித்து ஒரே மூச்சாக ஊர் போய்ச் சேர்ந்தேன்.

ஏழு தலைமுறையாகப் பிறந்த ஊராய் விளங்கிவரும் என் கிராமத்துக்குச்சென்று இந்தப் பாவி உடலை பாட்டில் போட வேணுமென்று தீர்மானித்தேன். துணியைப் பிரித்துப் போடடுக் கொண்டு மெழுகின மண் திண்ணையில் வாய் பேசாமல், கண் கொட்டாமல் சும்மா விருப்பதை விட மேன்மையான களிப்புண்டோ?

என் கிராமம் போய்ச் சேர்ந்தேன். ஒருவரிடமும் முழு ரூபாய் கிடையாது. எல்லோரும் இராப்பட்டினிதான். வீடெல்லாம் பாழ். குதிரில் நெல் கிடையாது. கண்ணில் களிப்பில்லை. விளைந்த விளைவை விற்று சர்க்காருக்குக் கிஸ்தி செலுத்தியாய் விட்டது. கலெக்டர்மார்கள், இதர அதிகாரிகளுக்கு எப்படி மாதச் சம்பளம் ரூபாய் ஆயிரம் கொடுக்கிறது? அவர்கள் குழந்தைகள் நகரத்தில் பங்களாக்களில் மான் குட்டிகள் போல்—'டால்கம் பவுடர்' கோலமிட்டு — விளையாடுகிறது? கிராமங்களில் குழந்தைகள் உடுத்தக் கூடக் கந்தை யில்லாமல் வேலியோரம் கதறி நின்று சப்பாத்திப் பழங்களை புருட் ஸால்டாகத் தின்ன—அதுகூட இப்பொழுது கிடைப்ப தரிதாய்ப் போய் விட்டது —கொச்சினியல் பூச்சி சப்பாத்தியைத் தொலைத்து விட்டது. மகா பாரதம் போல் குட்டிக் கதைகளை வளர விடாமல் எழுத வேணுமென்று எண்ணுகிறேன். ஆனால் என்னையறியாமல் கதைகள் வளருகின்றன. "யதா ராஜா ததா பிரஜா" என்றபடி ராஜாஜியிடம் நான் வைத்திருக்கிற அன்பினால் அவர் மொழிச் செல்வம் என்னையும் முட்டுகிறது, மன்னிக்க வேணும்.

மூன்றாம் நாள் ஊரில் வீட்டுத் திண்ணையில் என் பாவி உடம்பை பாட்டில் போட்டேன். ஆனால் வீட்டிற்குச் சமீபத்தில் புதிதாய் ஏற்பட்ட ஓர் ரைஸ்மில் என் சந்தோஷத்தையும், அமைதியையும் அடியோடு குலைத்தது. 'பும் பும்' என்று ரயிலில்லா ஊருக்கு புது ரயில் போட்டது போல் காலை 3 மணி முதல் மாலை 9 மணி வரை யில் காதைத் துளைத்தது.

இப்படி மூன்று நாள் கழித்தேன். நாலாவது நாள் காலையில் "பாரதமணி" ஞாபகமும் ஒரு கைக்குத்தல் அரிசி மூட்டையும் ஞாபகம் வந்தது. பரபரவென்று குதிரிலிருந்து நாலு கலம் நெல் எடுத்துக் கைக்குத்தல் குத்த என் குடியானவன் கிருஷ்ண படையாச்சியை கூப்பிட்டுக் கேட்டேன். "கிருஷ்ணா, இந்த நாலு கலத்தையும் கைக்குத்தல் குத்தி ஒரு மூட்டை அரிசி என்னோடு கூடப் பட்டணம் கொண்டு போகவேணும். அதற்கு வேண்டியதைச் செய்."

"கைக்குத்தலா, எஜமான்: நமது ஊரில் மூன்று வருஷமாக, உரல் ஏது, உலக்கை ஏது?"

"கை யேது?—பேஷ், கிருஷ்ணா உன் தலையாரி நாட்டாமையில் மிகவும் செழிப்புத்தான் போலிருக்கிறது. நம் ஊரில்கூட நாகரிகம் மிகவும் வளர்ந்து விட்டது. தினசரி 200 கலம் வலியன் குத்தி வந்த ஊரில் உரலேது, உலக்கை யேது, குத்தும் கை யேது—வாய்தான் இருக்கிறது, என்கிறாயே!"

"எஜமான், நான் என்ன செய்கிறது? நமது எதிர் மனைக்கு அடுத்த மனையில் தானே 'பும் பும்' என்று ராப்பகலாகத் தூக்க மன்னியில் ரைஸ் மில் வேலை செய்கிறது. தாழ்ந்த ஜாதியோர் முதற்கொண்டு யார் நெல்லுக் குத்துகிறார்கள்? கௌரவக் குறைவாய்ப் போய் விட்டதே! நெல் அரைக் கல்லயோ வென்று வார்த்தையே மாறிவிட்டதே."

"போகட்டும், கிருஷ்ணா. உன் வியாக்னம்! நம்ப ஊரைக்கூட கெடுக்க ஒரு ரைஸ் மில் வந்து விட்டதா? நான் மந்திரிகளுக்குத் தந்தி யடித்து இந்த ரைஸ் மில்லை நிறுத்தி விடுகிறேன். இதன் சப்தம் வயிற்றைத் துளைக்கிறது. அக்ரஹாரத்தைக் கெடுக்கிறது. போகட்டும். எனக்கு எப்படியாவது ஒரு மூட்டைக் கைக்குத்த லரிசிக்கு ஏற்பாடு செய். கேட்டதைக் கொடுக்கிறேன்."

"எஜமான், பெரியம்மா நாளில் நெல் குத்தின செவிடி ஒருவள் வேறு வேலையில்லாம லிருக்கிறாள். யஜமானுக் கென்று கேட்டு பார்க்கிறேன். எப்படியாவது எஜமானுக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன். —வெட்டுக் குளம் நாத்தங்கால் போன வருஷம் நன்றாய் விளைய வில்லை—மோட்டுக் கட்டளை—எஜமான் தள்ளிக் கொடுக்க வேணும். இந்த வருஷம் வெட்டுக்குப் பணம் ரூபாய் ஐந்து கொடுக்க வேணும்."

"கிருஷ்ணா, நீ இப்படியே வருஷா வருஷம் சொல்லுகிறாயே?"

"வயிற்றுப் பிழைப்புங்க எஜமான் ஒன்றுங் கட்டவில்லை."

"எவ்விதம் கட்டும், கிருஷ்ணா! ஊருக்கு மேற்கே குளத்தங் கரையோரம் 3 காபி கிளப்புகள், கிழக்கே விசாலமான கள்ளுக்

கடை. எப்படி கட்டும்? உனக்கோ தலை யாரி வேலை.''

"எஜமான்! பாருங்கள் மில்லை பூட்டி விட்டார்கள். ராத்திரி 8 மணி வரையில் ஓயாது. கைக்குத்துக்கு எங்கே போகிறது?''

'பும் பும்' என்று ரைஸ் மில் தன் ராக்ஷஸ வேலையை ஆரம்பித்து விட்டது. திண்ணையில் பாட்டில் போட்டிருந்த என் பாவி உடம்பு இந்த 'பும்'மைக் கேட்டதும் கோபத்தில் வருந்திற்று. கோபம் தாங்காமல் உடனே நமது பிரதம மந்திரி ராஜாஜிக்குத் தந்தி யடித்தேன்! "தயவு செய்து கள்ளுக் கடையை நிறுத்தியது போல் ரைஸ் மில்லையும் நிறுத்தி விட வேணும்.'' தந்தி போய்ச் சேர்ந்திருக்கு மென்று நினைக்கிறேன். அப்படிச் சேரா விட்டால் இதையே தந்தியாக வைத்துக் கொள்ள வேணும். பதிலும் எதிர் பார்க்கிறேன். கிடைத்தால் "பாரத மணி" யில் பிரசுரம் செய்கிறேன்.

அடுத்த வாரம் கைக்குத்தல் அரிசி மூட்டையின் கதையை தொடரலா மென்று எண்ணுகிறேன்.

மணி.

---

## ஜம்மி வெங்கட ரமணய்யா

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின் மறைவால் ஆயுர்வேத வைத்தியத்திற்கு ஒரு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது. குழந்தைக் கட்டிகளுக்கு மேநாட்டு வைத்தியத்தில் சிகித்ஸையே கிடையாது ; நாட்டு வைத்திய முறையில் குலைக்கட்டிகளிலிருந்து ஆயிரக்கணக்கான குழந்தைகள் தப்புவதற்குக் காரணமாக இருந்தவர் டாக்டர் வெங்கட ரமணய்யா. 'ஜெம்மி மருந்து' குழந்தைகளுக்கு ஒரு சஞ்சீவியாக இருக்கிறது என்பது நாம் கண்டறிந்த விஷயம்.

# ஒளி

எழுதியவர் :
ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி

மொழி பெயர்த்தவர் :
ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

## 1

அது 7-ம் நெ. வீடு. பழைய காலத்துக் கட்டிடம். ஆனால் அழகாகவும் 'கச்சித'மாகவும் இருந்தது. மைலாப்பூரில் வளைந்து வளைந்து செல்லும் ஒரு நீண்ட சந்தில் இருப்பது. அந்த சந்திற்கே ஒரு பெயரும் தூய்மையும் உண்டு. வெகு காலமாக அதற்கு ஒரு புகழ் ஏற்பட்டிருந்தது பல விஷயங்களில். முதலாவதாக, சாதாரணமாக நமது நாட்டில் சந்துகள் இருக்கும் நீளத்தைக் காட்டிலும் அது நீளம் ஜாஸ்தி. இரண்டாவதாக அதற்கு விநாயகக் கடவுளின் நாமதேயமே ஏற்பட்டிருந்தது. சந்தின் முனையில் சௌக்கியமான ஒரு கோவிலில் எழுந்தருளி பிள்ளையார் பொதுவாக மைலாப்பூர் வாசிகளின் க்ஷேமத்தையும் முக்கியமாக சில்லறைக் கடை முதலாளிகளின் வியாபாரத்தையும் ஆசீர்வதித்து வந்தார். நன்றாக எண்ணெய்க் காப்பில் கறுத்து சந்தனப் பொட்டிட்ட அவருடைய விசாலமான கஜ வதனத்தில் ஆத்ம திருப்தியும் கருணையும் திகழ்ந்தன. வாழ்க்கையில் தற்காலம் ஆசைகளும் கஷ்டங்களும் அதிகம் ஆக ஆக அவருடைய பங்கு தேங்காய்களும் சூடமும், சாம்பிராணியும் அதிகரித்தது.

அதுமட்டுமா? சந்து கபாலீசுவரர் கோவிலின் சதுரத்திற்குள் ஆரம்பித்துத் தென்பக்கம் தெற்கு மாடத் தெருவிற்குள் அகன்று சென்றது. அது கோவிலுக்கு மிகவும் முக்கியமான தெரு; காபி கிளப்புகளுக்கும், சில்லறைக் கடைகளுக்கும், யாத்திரீகர்களுக்கும், நாடோடிகளுக்கும் கூட அது முக்கியமான இடம். பற்றொரு கோடியில் பீதிபடைந்த ஒரு பாம்பின் வால் போல, பல திக்குகளில், மந்த வெளியின் மட்டக் குடியிருப்புகளின் இடையே விழுந்தது. சமீபகாலத்தில் அந்த சந்திற்கு வாய்த்த அதிருஷ்டம் மற்றொன்று. சென்னை ராஜதானி பூராவிலிருந்து வலைபோட்டு எடுத்தது போல வந்து குவிந்த செல்வத்தாலும் செழிப்பாலும் தலையெடுத்த மைலாப்பூர் வக்கீல்களில் சிலர் பிரபலஸ்தர்கள் ஆகு முன் அந்தச் சந்தில் வசித்தார்கள்!

இப்படியாகச் சந்தின் மகிமை ஒருபுறமிருக்க, 7-நெ. வீட்டின் சரித்திரம் இன்னும் மகத்தானது. பலதடவைகளில் ஒருவர் பின் ஒருவராக மூன்று அட்வகேட் ஜெனரல்கள் வியர்த்து வேலைசெய்து தொழிலில திண்டாடின காலத்தில் அதில் குடியிருந்தார்கள்! அதே வீட்டில்! ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ்கூட!

நமது கதை ஆரம்பமாகும் சமயத்தில் இந்த வீட்டில் குடியிருந்த பேர்வழி தேர்ச்சியிலும் சரி, ஆசைகளிலும் சரி, அவர்களுக்குக் கொஞ்சம கூட சளைத்தவன் அல்ல. ஏற்பட்டகாலம் பிசாசுபோல வேலை செய்து சட்ட நிபுணத்துவத்திற்கு தனது ஆண்மையையே அடகு வைத்து உழைத்து, நாளடைவில் 'லஸ்'ஸின் ஆழ்ந்த அமைதியில் நங்கூரம் பாய்ச்சலாம் என்று எண்ணி திட்டம் போட்டுக் கொண்டிருந்தான்.

என் கதா நாயகர்கள் எல்லோரையும் போலவே சுந்தரம் காலேஜில் முதல் தரத்தில் நீந்தினவன். ஆனர்ஸ் பரீக்ஷையில் உயர்தர கணிதத்தில் முதலாகப் 'பாஸ்' செய்தவன். தன் தெளிவான மூளைக்கும் தேர்ந்த ஆசைகளுக்கும் வக்கீல் தொழில் தான் சரியான இடம் என்ற தீர்மானத்திற்கு வந்து வேண்டுமென்றே தான் அதில் நுழைந்தான். இல்லா விட்டால் ஐன்ஸ்டின் தோன்றுவதற்கு முன்பே அவன் பூமியின் ஆகர்ஷண சக்தி தத்துவத்தை உடைத்தெறிந்திருப்பான். காலேஜ் ஆசிரியர் பதவி, செக்ரடேரியட்டில் உயர்தர குமாஸ்தா உத்தியோகம்— இவற்றைத் தன் திறமைக்குக் கேவலமானவை என்று உதறித் தள்ளிவிட்டான்.

வேண்டாமென்று. தன்னைப் போன்ற திறமை சாலைகள் பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டப் பிறக்கவில்லை—மனிதர்களுக்கு—என்று எண்ணினான்.

அந்தவீடு ஒரு ஸ்திரீயினுடையது. சுந்தரம் தன் ஆகிருதியாலும் இனிமையான பேச்சாலும் அவளுடன் பேரம் பேசி குறைந்த வாடகைக்கு சேர்ந்தாற்போல எழு வருஷங்களு வாடகைச்சீட்டு எழுதி முடித்தான். ஒரு பிரபல மைலாப்பூர் வக்கீலின் 'ஜூனிய'ராக அமர்ந்தான். சரியான யௌவனப் பருவத்தில் வாழ்க்கையின் சகல சௌக்கியங்களுக்கும் இடையூறாக அவர் ஆபீஸில் எழு வருஷங்களாக உழைத்தான். இன்னும் 7-ம் நெ. வீட்டின் முன்னேற்றம் அவனுக்குக் கிட்டவில்லை. 7-ம் நெ. வீடு கொடுக்கப்போகும் அதிருஷ்டத்தை எதிர்பார்த்த வண்ணம் இருந்தான்.

அந்த எழு வருஷங்களும் அவன் தொழிலில் எடுத்துக்கொண்ட சிரத்தையும், பாடும், உழைத்த உழைப்பும் அபாரம். அந்தத் தொழிலின் தன்மையை அனுசரித்து நோக்கப்படி வளைந்து கொடுத்து நடந்து கொள்ளும் சாமார்த்தியமும் அவனுக்கு இருந்தது. தொழிலோ பல சிக்கல்கள் கொணடது. நம்புவதற்கில்லை அதில் எதையும். அதனிடையே இடைவிடாமல் தளர்ச்சியேயின்றி, சீனியர் ஆபிஸில் ஒரு கை கண்ட முறைபாக அனுசரிக்கப்ப டு வந்த வழிகளையெல்லாம் கடைப் பிடிததும், எழு வருஷங்களுக்கு முன்பு, ஆரம்பத்தில் இருந்ததைக்காட்டிலும் மோசமான நிலைமைக்கு வந்து சேர்ந்தான் சுந்தரம். அவனுக்கு ஒன்றிலும் ஆறுதல் ஏற்படவில்லை. விதியொன்று தனியாக இருக்கிறது என்று அவன் மனைவி சுந்தரி கொண்டிருந்த திடமான நம்பிக்கைதான் அவனுக்கு ஓரளவு ஆறுதலை அளித்தது. அவள் அதிகமாக மதப்பற்றுள்ளவள்; இதிஹாஸ புராணங்களின் தத்துவங்களில் தோய்ந்த அவள் மனம் வாழ்க்கையின் மேடு பள்ளங்களைக்கண்டு அதிர்ச்சிபெறவில்லை. வாழ்க்கையைப் பற்றி ஹிந்து தர்மம் சொல்வது அவளுடைய ரத்தத்தில் ஊறிப்போயிருந்தது.

ஆனால் சுந்தரம் ஒரு தர்க்கவாதி; புலனுக்குப படுவது தான் அவனுக்கு அர்த்தமாகும்; கண்கண்டதுதான் அவனுக்கு வேதம். ஆனால் அவன் இயற்கையிலேயே ஓர் உன்னத கலைபுணர்ச்சி பெற்றிருந்தால் வெறும் கீழ்த்தரமான காரியவாதியாக இருக்கவில்லை. நிஷ்காமகர்மத்தில் அவனுக்கு திருப்தி ஏற்படவில்லை. காரியத்திலிருந்து ஏற்படும் பலன்கள் தான் அவன் உள்ளத்தைத் திருப்தி செய்தன. ஆகையால், மேன்மேலும் உழைத்துக் கொண்டே போனான்; அதற்கேற்ற பலன் ஏற்படாததால் திருப்தி ஏற்படவில்லை. அவன் மனம் சள்ளைப்பட்டது; மூலாதாரங்களை ஆராய ஆரம்பித்தான். ஆனால் அவனுக்கு ஒரு சிக்கலுக்கும் சரியான பதில் கிடைக்கவில்லை. வாழ்க்கையின் திட்டமே தப்பென்று பட்டது அவனுக்கு. தோர்ந்தவர்களுக்குக் கிடைக்கவில்லையே வெற்றி!

அவனுடைய புகார்களையெல்லாம் ஒரு தெய்வீகப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு வந்தாள் சுந்தரி. ஒவ்வொரு சமயம் அவன் மிதமிஞ்சி புண்பட்ட சமயம் அவள் அவனுக்கு உருக்கமான ஸ்தோத்திரப் பாடல்களையும் நாமாவளிகளையும் உணர்ச்சியுடன் பாடித் தேறுதல் கூறுவாள். வாழ்க்கையின் விபரீதத்தை விளக்க முடியாமல் தர்க்கவாதம் கூடத் தடுமாறின பொழுது இந்தப் பாட்டுகள் எப்படித் தனக்கு அமைதி அளித்தன என்று சுந்தரம் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஆச்சரியப்படுவான்.

(2)

தெளிந்த நீலவானத்தில் பிறைச்சந்திரன் ஒரு மங்கிய புன்சிரிப்புடன் தோன்றினான். சுந்தரம் வசித்த சந்தில் அப்பொழுதே இரவின் தேக்கம் ஆரம்பித்துவிட்டது. பக்கத்து ரஸ்தாவில் மட்டும் பெட்ரோல் வேகத்தில் பதைத்தவண்ணம் கார்கள் வீறிட்டுச் சென்றன. கடைசியாக வந்த அப்பீல் கேசுகளை எடுத்து மார்பில் சாற்றிக்கொண்ட வண்ணம் சுந்தரம் சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தான். நாட்டின் தலைமைச் சட்டத்தை வகித்த அந்தக் காகிதங்கள் அவன்

மூச்சு விடும்பொழுது ஹிருதயத் துடிப்புடன் துடித்தெழுந்து விழுந்தன. அவன் மேலே இருந்த மின்சார விளக்கின் பல்லையும் உள்ளே யிருந்த நக்ஷத்திர ஜோதியையும் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். விளக்கைக் கண்டு பூச்சி வந்தது; பூச்சியைக் கண்டு பல்லி வந்தது. கண்களைக் கூசச் செய்யும் அந்த ஒளியிலும் அதன் கண்களிலிருந்து ஒரு குரூரமான வேட்கை ஒளி வீசினது அவனுக்குத் தெரிந்தது. சமயம் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பார்வையைப் பார்த்துக் கொண்டே சுந்தரம் ஒரு ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். பூச்சியை விழுங்கின அந்தப் பல்லியின் கண்களிலிருந்து கிளம்பின அந்த ஒளி வாழ்க்கையின் மறைந்து கிடந்த ஒரு பாதையை விளக்கினது போல இருந்தது. மெதுவாக யோசனையில் ஆழ்ந்தான்.

ஆள் ஆஜானுபாகு, நல்ல சிவப்பு, கடைசல் பிடித்தது போன்ற முகவெட்டு முதலியன—எந்த நிலையிலும்—நடந்தாலும், நின்றாலும், உட்கார்ந்திருந்தாலும், எழுதிக்கொண்டிருந்தாலும், சும்மா சாய்ந்துக் கொண்டிருந்தாலும் சுந்தரம் வசீகரத் தோற்றத்தையே அளித்தான். ரிஷப லக்கினத்தில் பிறந்தவன் — மாடு போல் தளராமல் சளைப்பின்றி உழைக்கும் ஸ்வபாவம் கொண்டவன். பிறரிடம் அதிகமாக இல்லாத மற்றொரு குணமும் அவனிடம் தென்பட்டது—ரஸிகத் தன்மை. அவன் செய்தது எல்லாவற்றிலும் அது தென்படும். விரல் நகம் எடுப்பதிலிருந்து அப்பீல் தயாரிப்பது வரை—அவன் செய்வது எல்லாவற்றிலும் ஒழுங்கும், நாசூக்கும், அமைப்பும் உருவமும் இருக்கும். அவன் வேலை அவனுக்குப் பரமானந்தமளிக்கும்—ஆனால் அதற்கேற்ற பலனாகப் பணம் வந்தால்தான். இல்லாவிட்டால் அது அவனுக்குத் திருப்தி கொடுப்பதில்லை. எவ்வளவு உயர்வாகவும் பரிபூர்ணமாகவும் இருந்தாலும் அதில்லாவிட்டால் அவன் வேலை அவனுக்கு ருசிப்பதில்லை.

(தொடரும்)

உங்களுக்கோர் முத்து மாலை!

**பாரத மணி**யின் முதல் 25 முத்துக்கள் கோர்க்கப் பட்டு பைண்ட் வால்யூமாகத் தயாராகி விட்டது.

*

**இரண்டே ரூபாய்தான்**

*

உங்கள் பிரதிக்கு உடனே எழுதுங்கள் :—

பாரத மணி கார்யாலயம்

312, தம்புசெட்டி தெரு, ஜி. டி. சென்னை.

**Markandeya Ashrama Elementary School,**

TIRUKADAIYUR

—o—

Wanted a B. A., L. T., or Secondary Grade Teacher for the Markandeya Ashrama Elementary School at Tirukadaiyur, near Tranquebar. Five years' teaching experience and age not above 35 preferred. Salary according to qualifications. Apply to: K. S. Venkataramani, No. 7, North Mada Street, Mylapore.

# "நாள்"

(ஸ்ரீ ராஜப்பா)

காலந் தனக்குயர் பெண்கள்—பூ
கபட மாகிய நாட்கள்.
கோலஞ் செயும்கா லைநேரம்—வேண்டிக்
கொடுக்கும் வந்தனை மறந்து.
நீலவா னத்திடை நோக்க—எதிர்
நிகழ்ந்த புதுமை யதனை.
பாலின் சுவைநிகர்த் தமிழில்—சிந்துப்
பாட்டினுல் சொல்லிடு வேனே.
சந்தடி புரிந்து கொண்டும்—மௌனம்
தனையே சுவைத்து கொண்டும்
கந்த மலர்நிகர்க் கழலால்—ஒலி
காட்டுத லின்றிவெம் பாலையில்
மந்தைபோல் போம்பி ரயாணிகள்—முடி
வற்றப ரிவாரமொ டேக
சிந்தையில் என்னவோ எண்ணியே—தனிச்
சென்றனன் அங்கும் ஒருவனே
விறகொடு நகைகை கொண்டு—பாலை
மீறி நார்புரம் சார்ந்து
வறுமைகொள் மக்களைக் கண்டு—தம்
மனதிற் கிசைந்த வண்ணம்.
திறந்த மடையது போலே—அவர்
செய்தார் புகழுக் குச்சேவை
உறமுள தனியோன் வந்தான்—அங்கு
உற்றஏ ழைகளைக் கண்டே
தன்கையால் ஓர்பிடி பஞ்சு—புது
சர்க்கா ஒன்றினையுங் காட்டி.
என்னுடைய தர்மம திதுவாம்—இதை
ஏர்க்க மனமது கொண்ட
அன்பர் களிங்குவந் துளரோ—என்று
அழுதிசை பாடும் ராட்டை.
மின்னெனச் சுழற்றி விட்டனவே—நாள்
மறைந்தது ராட்டினேர் சுற்றுபோல்!

# வாழ்க்கைப் பருவங்கள்

(ஸ்ரீ கே. ஸி. ஏ. சங்கரலிங்கம், பி. ஏ.)

ஆண் பெண் இரு பாலரின் வாழ்க்கையை சாதாரணமாக மூன்று பருவங்களாகப் பிரிக்கலாம். அவை முறையே குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் எனப்படும். இவ்வாறு பிரித்துக் கூறுவதற்குக் காரணமென்னவெனின் மனிதனின் வாழ்க்கை பிறந்தது முதல் இறக்கும் வரை ஒரே தன்மையையுடையதாயில்லாமல் வயதிற்கேற்பவும், உலகறிவிற்கிணங்கவும் மாறி வருகின்றது. அவ்விதம் மாறிவரும் ஒவ்வொரு பருவங்களே, குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவமாம்.

இவ்வாறு மாறிவரும் தன்மை அவனுடைய இயல்பான குணங்களையும். அடிப்படையான நோக்கங்களையும் சார்ந்திருக்கின்றனவா என்ற கேள்வி பிறக்கின்றது. இக்கேள்விக்கு 'இல்லை' என்று துணிந்து பதில் கூறலாம். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும்' என்ற முதுரை அநேகமாய்ப் பொய்யாகாது. இன்று பொய்யன் என்றும் பொய்யனே. இன்று முன் கோபி என்றும் முன்கோபியே. தப்பித் தவறி ஆயிரத்தில் ஒருவன் வாழ்க்கையில் அவனுடைய இயல்பான குணங்களில் சில பிற்காலத்தில் மாறுதல் அடையலாம். ஆனால் இதைப் பொதுவாகக் கூறுவது மிக்கப் பிசகானது. சிறிதும் பொருத்தமாகாது. பின் எவ்வெவ் விஷயங்களில் மாறுதல் ஏற்படுமெனின், அவன் நோக்கங்களிலும் ஆசைகளிலுமே.

இனி அம்மூன்று பருவங்களின் லட்சணங்களையும் செய்கைகளையும் தனித்தனியே கவனிப்போம். முதலாவதாக குழந்தைப் பருவத்தைப் பார்ப்போம். ஒரு குழந்தையைப் பார்த்து, இது ஒரு 'குழந்தை' என்கிறோம். ஏன் வயதில் சிறியதென்றதினாலா? அல்லது வேறு ஏதாவது அர்த்தத்தினாலா? வயதில் சிறியதாயிருக்கிறதினால் மட்டுமல்ல, அவ்வயதிற்கேற்ப சுபாவமும் செய்கையும் பொருந்தி இருக்கிறதால் நாம் அதை 'குழந்தை' என்று அழைக்கிறோம். வயதில் முதியவர் ஒருவரை அவ்வயதிற்கேற்ப நோக்கங்களையும் பேச்சையும் உடையவராயில்லாவிட்டால் நாம் அவரை 'என்ன குழந்தை போல் பேசுகிறீர்' என்று சொல்வதுண்டு. அல்லது ஒரு சிறு பையனைப் பார்த்து, தன் வயதிற்குரியவர் செய்வதற்கு முடியாத செய்கையை அவன் செய்வானேயாகில், அவனை நாம் விளையாட்டாக 'நீ என்ன ரொம்ப பெரியவனாகி விட்டாயே' என்று சொல்வோமல்லவா?

குழந்தைகளுக்குப் பொதுவாக ஆச்சரியத்தையும் பிரியத்தையும் கொடுக்கக்கூடிய வஸ்துவின் மேலேயே கண்ணோட்டமிருக்கும். அவர்கள் மனமெல்லாம் விளையாட்டிலும் விநோதத்திலும் லயித்திருக்கும். கவலையும் பொறுப்புமற்ற ஜீவன்களாய், தாம் செய்வதென்ன, ஏன் செய்கிறோம், அவ்விதம் செய்வதாலுண்டாகும் நன்மை தீமைகளென்னவென்று விஷயங்களை அலசிப்பார்க்கும் தன்மையில்லாதவர்களாய் இருக்கிறார்கள். எல்லாம் தங்களுக்கே வேண்டுமென்ற ஆசையையுடையவர்களாய் இருக்கிறார்கள்.

நாளாக ஆக, அறிவு வளர வளர மேற்கூறிய தன்மைகளில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. விநோதத்திலே லயித்திருந்த மனது கொஞ்சங் கொஞ்சமாக மறைகின்றது. வெறும் விளையாட்டிலே கண்ணும் கருத்துமாயிருந்த எண்ணம், உடம்புக்கு உறுதியையும் மனதிற்கு சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய விளையாட்டிலே செல்லுகின்றது. தன்னிலும் உடலுறுதியுடையார்களைக் காணின் தானும் அவர்களைப்போலிருக்கவேண்டுமென்ற ஆசையுண்டாகிறது. பந்து விளையாட்டில் தேர்ச்சி பெற்று ஒருவன் விளங்கினால், தானும் விளையாட்டில் தேர்ச்சிபெற்று பரிசுகள் வாங்கவேண்டுமென்ற அவா உண்டாகின்றது. அநேகமாய், அவர்கள் எண்ணமெல்லாம் தேகத்தைப் பற்றியும்

அதைச்சார்ந்த விஷயங்களைப் பற்றியுமே தான் ஆழ்ந்திருக்கும்.

பதினெட்டுவயது நிரம்பியபின் வாலிபப் பருவத்தை அடைகிறான். இப் பருவத்தில் அவன் எண்ணங்களும் நோக்கங்களும் வளர்ச்சி யடைகின்றன. பெற்றோரையும் பெரியோரையும் ஒட்டி வாழவேண்டு மென்ற எண்ணம் போய் தனி வாழ்க்கை நடத்த வேண்டு மென்ற விருப்பம் தோன்றுகின்றது. அடுத்தவர் சொல்லுக்கு அடங்கி நடக்க வேண்டு மென்று சொன்னால் அவன் வீரியம் வீறிட்டு எழுகின்றது. தன் மனதில் சில லக்ஷியத்தைக் கொண்டு, இவ்வாறு வாழ்க்கையை நடத்த வேண்டும், அவ்வாறு இஷ்டம் போலிருக்கவேண்டு மென்ற ஆசை வருகிறது. ஆனால் அந்த லக்ஷியங்களெல்லாம் தினசரி நடத்தையில் ஒத்து வருமா வாராதா என்பதைப் பற்றி கவலைப்படுகிறதில்லை. வாலிபத்தின் ஊக்கமும் ஆர்வமும் எவ்விஷயத்திலும் தீவிரமா யிருக்க வேண்டுமென்று தூண்டுகிறது. "அப்பா மகனே, நீ அவளை மணம் செய்துகொள்வதற்கு முன் அவள் யார், அவள் குலம், கோத்திரமென்னவென்று விசாரித்தாயா?" என்று ஒரு தகப்பன் கேட்டால், உடனே "உங்களுக்கென்ன கவலை வந்துவிட்டது அதைப்பற்றி? அவள் யாரா இருந்தாலென்ன? அவளே எனக்குப் பிடித்தவள் அவளையே தான் நான் மணம் செய்துக் கொள்வேன்" என்பான்.

யாரேனும் எதைப்பற்றியாவது சொல்வார்களாயின், சொன்னவைகளை யெல்லாம் அப்படியே பருகாமல், ஏன் அது அவ்விதமிருக்க வேண்டும், இவ்வித மிருந்தாலென்ன, அதனால் என்னவாகும் என்று யோசிக்க ஆரம்பிக்கிறான். மூதாதையார் பழக்க வொழுக்கங்களைப் பின்பற்றி ஒழுக வேண்டுமென்று போதித்தால் அவன் இளமையும் நாகரீகமும் அதை உதறித் தள்ளுகிறது. பழமையானவைகளைக்கழித்துபுதியவைகளை அனுசரிக்கவே அவன் நாட்டமெல்லாம் செல்லுகின்றன. வாழ்க்கையோடு சம்பந்தப்படும் எல்லா விஷயங்களிலும் தீவிரப் பங்கெடுத்துக் கொள்ள விரும்புகின்றான். குழந்தைப் பருவத்திலிருந்த, தன்னைப்பற்றிய நன்மை என்ற குறுகிய எண்ணம் போய் பிறருக்காகவும் பாடுபட வேண்டுமென்ற உயர்ந்த எண்ணமும் உதிக்கின்றது.

பிறகு நாற்பது வயதிற்குமேல் முதுமைப் பருவத்தை அடைகிறான். வாலிபத்திலிருந்த ஊக்கமும் ஆர்வமும் குறைகின்றது. திரைகட லோடியும் திரவியம் தேட வேண்டுமென்று வாலிபத்திலிருந்த ஊக்கம் போய், இருக்கிறதை வைத்து சமாளித்து மேன்மேலும் விருத்தி செய்ய வேண்டுமென 'அமைதி' மனப்பான்மை உண்டாகிறது. வாலிபத்தில் கட்டின லக்ஷியங்கள் நிறைவேறாமல் வருவதைக் கண்டு கவலைமேலிட, கடைசி நாட்களை எவ்வளவுக் கெவ்வளவு கவலையின்றியும் அடக்கமாகவும் கழிக்க சாத்தியமாகுமோ அதையே பெரிதும் விரும்புகின்றான்.

எவரேனும் யாதாயினுமொன்று சொல்லுவாராயின் 'அவர் சொல்வதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறது; நன்மைக்குச் சொல்லுகின்றாரா அல்லது தீமைக்கா' என்று தீரயோசிக்கும் தன்மையையும், எதுவானாலும் தான் ஜாக்கிரதையாக யிருந்து கொள்ள வேண்டுமென்ற 'ஜாக்கிரதை' மனப்பான்மையும் உண்டாகிறன. ஒரு காரிய விஷயத்தில் மனம் புதிய வழியில் இலகுவில் செல்லுகிறதில்லை. தான் அநுபவத்தில் கண்டறிந்தவைகளிலே நம்பிக்கை கொண்டு காரியங்களை அவ்வழியிலே செய்து முடிக்க முயலுகின்றான்.

இப் பருவத்தில்தான் தன்மேல் சுமத்தப்பட் டிருக்கும் பொறுப்பையும் கடமையையும் சரிவர உணர்கின்றனன். கடமையை நிறைவேற்றாவிடில் உலகம் தம்மை பழிக்குமென்று அறிகின்றான். குடும்பக்கவலையும் பிள்ளைகளை 'ஆளாக்கி' நல்ல ஸ்திதியில் வைத்து கண் குளிர காண வேண்டுமென்ற அவாவும் மனதை இங்குமங்கும் அலையும்படி செய்கிறது. பிற்காலத்திய ஜீவியத்தை அக் கடமையை நிறைவேற்றும் வேலையிலே கழிக்கின்றான்.

மேலும் இப்பருவத்தில், போதிப்புத் தன்மையை (Moralising Tendency) பெறுகிறான்.

# பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான்.

(ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி)

சென்ற வாரம் பார்லிமென்டில் வெளிநாட்டு அமைச்சர் ஹலிபாக்ஸ் பிரபுவும் முதலமைச்சர் சேம்பர்லினும் தாங்கள் ஜெர்மனியை வளைக்க விரும்பவில்லையென்றும் ஜெர்மனிக்கு வர்த்தக சலுகைகள் அளிக்கக் தயாராயிருப்பதாகவுங் கூறினார்கள். சேம்பர்லின் ஏற்கனவேயே கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனிக்கே அதிக அக்கரையுண்டென்று ஒப்புக்கொண்டுள்ளார். அம்மாதிரியே மத்திய தரைக் கடற் கரைப் பிரதேசத்திலும் பால்கன் நாடுகளிலும் இத்தாலிக்கே உண்டென்றும் கூறியுள்ளார். ஜெர்மனியின் நன்மையின் பொருட்டே மியூனிச்சில் ஜெக் நாட்டை அர்ப்பணம் செய்தார். இன்னும் லண்டனிலுள்ள ஜெக்தங்கம் ஜெர்மனி செல்வதைத் தடுக்க முன் வரவில்லை. ஜெர்மனி கடற் படையொப்பந்தத்தைக் கிழித்தாலும் சேமபர்லின் ஒப்புக்கொள்ளவில்லை. அல்பேனியாவை இத்தாலி அபகரித்தாலும் ஆங்கிலோ இத்தாலிய ஒப்பந்தம் பாதிக்கப்படவில்லையென்கிறார். இத்தாலிய ஆயுதங்களும் விமானங்களும் ஒப்பந்தத்திற்கு மாறாக ஸ்பெயினில் விடப்பட்டிருந்தாலும் அது பாதிக்கவில்லையென்கிறார். இதே சேம்பர்லின்தான் பிரான்சும் தம் நாடும் மறைந்த ஸ்பானிஷ் சர்க்காருக்குத் தளவாடங்களைக் கொடுக்க மறுக்குப்படி செய்தார். அவ்வாறு கொடுப்பபது தலையீட்டுக்கொப்பாகுமென்றார். ஜெர்மனியும், இத்தாலியும் ஸ்பெயினில் பிராங் கோவிறகு உதவி செய்தது இன்று நன்கு வெளிப்பட்டிருந்தும் அவைகளுடன் சமரசம் செய்யத் தயாராயிருக்கிறார். அந்நாடுகள் இன்று ஸ்பெயினைத் தம் வசப்படுத்த முயலுகின்றன. உலகிலுள்ள பாதரச சுரங்கங்கள் இத்தாலியிலும் ஸ்பெயினிலுமே உள்ளன. முன்னர் பிரிட்டனுக்கு ஏற்றுமதியாகி வந்த பாதரஸத்தை இன்று ஜெர்மனி முழுதும் தனக்கே எடுத்துக்கொள்ள முயலுகிறது. அது செய்த உதவிக்காக பிராங்கோ அதற்கே அளிப்பார். அதனால் ஜெர்மனியின் ஆயுத பலம் பெருகுமென்பதில் ஐயமில்லை. ரோம்—பர்லின் அச்சு நாடுகளைத் தவிர இதர நாடுகளுக்குப் பாதரசம் கிடைக்காது. அப்படியிருந்தும் சேப்பர்லின் ஜெர்மனியுடன் சமரசம் பேசுகிறார்.

அதே பிரிட்டிஷ் அரசாங்கம் கிழக்கு ஆசியாவில் அனுஷ்டிக்கும் கொள்கையென்ன? மகா யுத்தம் முடிந்தவுடன் நடைபெற்ற சமாதான மகா நாட்டின் போது ஜப்பான், எல்லா நாடுகளும் சமமென்றும் எல்லா இனத்தவரும் ஒரு தரத்தவரென்றும் தீர்மானம் கொண்டு வர விரும்பியதை நேச தேசத்தினர் தடுத்தனர். மகா யுத்தத்தின்போது ஜப்பான் நேச தேசத்தினரோடு சேர்ந்திருந்தாலும் அதனுடைய பங்கு குறைவே. எனினும், அது அவர்கள் சார்பிலிருந்ததால் பசிபிக் சமுத்திரப் பரப்பைக் குறித்து பிரிட்டன் கவலைப்படாமலிருந்தது. சைனாவில் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த ஷான்டங் மாகாணத்தை ஜப்பான் பிடித்தது. ஆனால் யுத்த முடிவில் அமெரிக்காவும், பிரிட்டனும் கூறிய யோசனைக் கிணங்க அது சைனாவிடம் அதனை அளித்துவிட்டது. யுத்தத்தின் பலனாக அதற்குக் கிடைத்ததெல்லாம் பசிபிக் சமுத்திரத்திலுள்ள சில தீவுக் கூட்டங்களே.

மகாயுத்தத்தின் பிறகு ஜப்பான் கைத்தொழிலில் மிகவும் சிறந்தோங்கி விளங்குகிறது. அதன் ஜனத்தொகை பன்மடங்கு பெருகி வருகிறது. நாட்டின் ஏற்றுமதிப் பெருக்கினாலேயே மக்களுக்கு உணவுண்டு. யுத்தத்தின் பிறகு மன்பதையிலுள்ள பல நாடுகளும் தங்கள் தங்கள் பிரதேசங்களில் நிற வேற்றுமையைப் பாராட்டத் தொடங்கி விட்டன. ஜனப் பெருக்கை வேண்டும் நாடுகளும் வெள்ளையர் குடியேற்றமொன்றையே அனுமதித்து இதரர் குடியேற்றத்தைத் தடுத்து வருகின்றன. அந்நிலையிலேயே ஜன நெருக்கமுள்ள ஜப்பான் கைத்தொழிற்

பொருட்களின் ஏற்றுமதியாலேயே தன் ஜீவனத்தை நடத்தவேண்டியதாகி விட்டது. ஆனால் அதற்கும் தடைகள் ஏற்பட்டன. காலனிகளைக்கொண்ட ஐரோப்பிய நாடுகள் தங்கள் தங்கள் நாட்டுச் சாமான்களே தங்கள் ஆட்சியிலுள்ளப் பிரதேசங்களில் விற்பனையாக வேண்டுமென்றும் இதர சரக்குகள் இறக்குமதியாகாமலிருக்க "ஒட்டாவா" கொள்கையைக் கையாளப் புகுந்தன. எனவே, ஜப்பானுக்கு ஜன நெருக்கடியினால் நிகழக்கூடிய கஷ்டமும், ஏற்றுமதித் தடையினால் வரக்கூடிய தொந்தரவும் நிறைந்தன. ஆகவே அதற்குப் பரிகாரம் தேடப் புகுந்தது.

உலகிலுள்ள பெரும்பாலான பிரதேசங்கள் ஐரோப்பிய நாடுகளின் வயப்பட்டிருக்கின்றன. ஜப்பானுக்கு அவைகளில் தலையிடத் தைரியமில்லை. எனவே, அண்டையில் பெருத்த நாடாகிய சைனாவின்மேல் அதன் பார்வை திரும்பியது. அது பலஹீனமாயிருந்தது. அந் நாட்டில் அமெரிக்காவும், பிரிட்டனும் பெருத்த செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆகவே பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுக்குள்ள வர்த்தகத்தை ஒழித்து அதனைத் தான் பெறுவதென முடிவு கட்டியது. அவ்வாறு செய்ய சைனாவின் உதவியில்லாமல் எங்ஙனம் முடியும்? கொரியாவையும், பார்மோசாவையும் சைனாவிடமிருந்து பற்றிய ஜப்பானை சைனா எங்ஙனம் நம்ப முடியும்? வல்லரசுகள் தன் நாட்டில் சிறிது ஆதிக்யம் பெற்றிருப்பதாலேயே ஜப்பான் தன்னை சும்மா விட்டிருக்கிறது என அது எண்ணின. ஆகவே அது ஜப்பானுக்கு உதவ முன் வரவில்லை. தவிரவும் நாடு ஏழ்மைமி லிருப்பதால் தன் கைத்தொழில்களை விருத்திசெய்து செல்வத்தைப் பெருக்கவேண்டுமென அது விரும்பியது. ஆகவே ஜப்பானுக்கு இடங்கொடுத்தால் தன் கைத்தொழிலைப் பாதிக்குமென எண்ணியது. தன் பலம் பெருகும் வரை ஜப்பானுக்குச் சலுகைகள் அளிக்க அது விரும்பவில்லை. ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சர் ஹிராடோ சைனா அமெரிக்க, ஆங்கிலேய உறவை விட்டு ஜப்பானிடமே நெருங்கிய உறவுகொள்ள வேண்டுமென்றும் கேட்டார். அதை சைனா புறக்கணித்துவிட்டது. எனவே, சைனாவில் தன் சொற்படி கேட்கும் அரசை நிறுவ ஜப்பான் தீர்மானித்து வேலையைத் துவக்கி விட்டது. மஞ்சூரியாவைத் தன் கையாளின் தலைமையில் முடியரசாக நிறுவியது. இன்றும் சைனாவில் கைப்பற்றி வரும் பிரதேசங்கள் யாவற்றிலும் அவைகளைத் தன் ஆட்சியில் உட்படுத்தாமல் தன் சொல் கேட்கும் சீன நபர்களின் ஆட்சியையே நிறுவி வருகிறது.

ஜப்பானிடம் மதிப்புள்ள சீன பிரமுகர்கள் ஆட்சி தோன்றுவதால் ஜப்பான் வர்த்தகமே பெரிதும் ஓங்கி வருகிறது. அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன் முதலிய நாடுகளின் வியாபாரம் குறைந்து வருகிறது. சைனா அறியாமையில் பல ஹீனமாயுமிருந்த காலத்தில் அந்நாடுகள் பெற்ற அநியாயச் சலுகைகளை ஒழிக்கவும் ஜப்பான் தலைப்பட்டுள்ளது. சைனாவின் கடற்கரையோரத்திலுள்ள எந் நகரத்திலும் அந்நிய நாட்டுச் சலுகை. விசேஷ உரிமை. ஹாங்காங்கிற்கும் பிரிட்டனுக்கும் என்ன சம்பந்தம்? எவ்வாறு ஜப்பான் கொரியாவையும், பார்மோசாவையும் அபகரித்ததோ அங்ஙனமே பிரிட்டனும் கவன்றது. ஆனால் பிரிட்டன் முதலிய நாடுகள் சைனாவில் பெற்றிருக்கும் விசேஷ உரிமைகளால் தங்கள் வர்த்தகத்தைப் பெரிதும் பெருக்கியிருக்கின்றன. இன்று ஜப்பான் வெற்றியால் தங்கள் வர்த்தகம் பாதிக்கப்படுவதால் அவை முறையிடுகின்றன.

கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனிக்கே அதிக அக்கரை உண்டென்ற சேம்பர்லின் அத்தகைய உரிமையை ஜப்பானுக்குக் கிழக்கு ஆசியாவில் கொடுப்பதற்கென்ன? இன்று வெள்ளையரல்லாத நாடுகளில் ஜப்பான் ஒன்றே தலை சிறந்து விளங்குகிறது. அதனை அழிக்க இங்கிலாந்து ஜெர்மனிக்கு விட்டுக் கொடுப்பதாகக் கூறுகிறது. ஐரோப்பியத் தொல்லையில்லாவிடின் பிரிட்டன் ஜப்பானுக்கு மேலும் தொந்தரவளிக்குமென்றும் அவசியமாயின் போரிடுமென்றும் கூறலாம். இன்று பர்மா வழியாகச் சைனாவிற்கு ஆயுதங்கள் செல்ல பிரிட்டனே உதவுகிறது.

# நிரபராதி

(ஸ்ரீமதி ஸி. ஸத்யவதி)

கோவிந்தராஜன் சீமைக்குப் போன அடையாளங்களில் ஒன்று குட்டை மீசையும் மற்றொன்று குட்டைப் பெயரும்! பெயரை ஜி. ராஜன் என்று மாற்றிக் கொண்டுவிட்டான். அவன் என்ன வேண்டுமானால் செய்துக் கொள்ளலாம். அவன் ஒரு ஐ. ஸி. எஸ். அல்லவா? ராஜன் நல்ல ஹோதாவில் இருக்கிறான். அவன் குண்டூர் ஸப்கலெக்டர். அவன் மனைவி லக்ஷ்மியும் நன்றாய்ப் படித்திருந்தாள். இருவரும் சகஜமாய் கிளப்புக்குப் போவதும், எல்லோருடன் பேசுவதுமாகக் குதூஹலமாய் இருந்தார்கள். ஆனால் இவ்வளவு நவநாகரீகத்தி லீடுபட்டிருந்தபோதிலும், லக்ஷ்மி தன் கணவனுடைய முகம் கோணாமல் அவனுக்கு என்னவேண்டுமென்பதை அறிந்துகொண்டு செய்து வந்தாள். இதைப்பற்றி கணவனும் வெகு பெருமை கொண்டதும் இயற்கையல்லவா?

லக்ஷ்மியின் பால்ய சிநேகிதி வசுமதி என்பவள் குண்டூரில் புகையிலைக் கம்பெனியின் மானேஜருடைய மனைவி. தன் பால்ய சிநேகிதியைப் பார்க்க ஆவல் கொண்ட லக்ஷ்மி அவளைப் பற்றி விசாரித்ததில், அவள் தன் கணவனுடன், முக்கியமான அலுவலை முன்னிட்டு தன் ஊருக்குப்போயிருப்பதாய் தெரிய வந்தது.

தீபாவளிக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. அதற்குச் சரியாய், ராஜன் 'கேம்புக்கு'ப் போவதாய் அறிந்த விஜயலக்ஷ்மி, தம்பியின் பங்களாவுக்கு வந்து தீபாவளி கழித்து 'கேம்புக்குப்' போகும்படி சொன்னாள். ஆனால் ராஜன், "இந்த பிரயாணத்தை நிறுத்த முடியாது, வெகு அவசரமான வேலை" என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான். அதற்கவள் "லக்ஷ்மியை எங்கள் வீட்டிற்கு அனுப்பு. நீயும் இப்பொழுதே கேம்புக்குப் போயிவிடுகிறாயே" என்றாள். அவன் அதற்குச் சம்மதித்துக் கேம்புக்குப் போய்விட்டான். லக்ஷ்மியும், தன் துணிமணிகளை எடுத்துக் கொண்டு நாத்தியுடன் புறப்பட்டுப் போய்விட்டாள்.

'கேம்புக்கு'ப் போன ராஜன் ஆபீஸ் விஷயமாய் திரும்பவும் வீட்டிற்கு வந்தான். வீட்டில் நுழையும் பொழுதே லக்ஷ்மியில்லாமல், அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆபீஸ் வேலையை முடித்துக்கொண்டதும், இன்னும் சாவகாசமிருந்ததால், லக்ஷ்மியின் அறைக்குள் நுழைந்தான். அவள் வைத்திருக்கும் சாமான்களைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது அவ்விடம் வைத்திருக்கும் 'லெட்டர் லாக்' கால் பூட்டப்பட்ட ஒரு ரங்கூன் 'சூட்கேஸி'ன் பேரில் அவன் திருஷ்டி பட்டது. பெட்டி மிகவும் நேர்த்தியாகவும், அழகாயும் இருந்தபடியால் பூட்டை மிகவும் பிரயாசையுடன் திறக்க முயன்றான்.

லக்ஷ்மி தன்னிடமிருக்கும் சாமான்களெல்லாவற்றைப் பற்றியும் அவனிடம் சொல்லியிருக்கிறாள். ஆனால் இந்த ரங்கூன் பெட்டியை பற்றி ஒரு நாளும் தன்னிடம் கூறவில்லையே யென்று யோசித்தவாறு பெட்டியைத் திறந்து விட்டான். அதில் குங்குமம், ஜவ்வாது, டி. எம். ஸி. நூல்கள், ஒரு தந்தப் பெட்டி இருப்பதைக் கண்டு, தந்தப்பெட்டியில் என்ன இருக்கிறதோவென்று அதைத் திறந்தான். அதில் "சீனு" வென்ற பெயருடன், வரையப்பட்ட காதல் கடிதங்கள் இருப்பதைக் கண்டான். இதைப் பார்த்ததுமே அவனுக்குச் சொல்ல முடியாத துக்கமும், கோபமும், லக்ஷ்மியின் பேரில் ஏற்பட்டன. அப்பொழுது அவனை யாராகிலும் பார்த்திருந்தால் எரித்துவிட்டிருப்பான். உடனே ராஜன் ஒரு யோசனையும் செய்யாமல் தன் தமக்கை விஜயலக்ஷ்மிக்கு ஓர் கடிதம் எழுதி தான் கேம்புக்குப் போனவன் திரும்பவும் ஆபீஸ் விஷயமாய் வீட்டிற்கு வந்ததாயும், வீட்டில் லக்ஷ்மி தன் காதலனிடமிருந்து வந்த கடிதங்களை ஜாக்ரத்தையாய் பெட்டியில் வைத்திருப்பதை

தான் அறிந்ததாகவும், அவள் இனிமேல் தன் வீட்டிற்கு வரவேண்டாமென்றும், தன் தமக்கை வீட்டிலும் இருக்க வேண்டாமென்றும், இனிமேல் அவள் முகத்தில் விழிக்கப்போவதில்லை யென்றும் கடிதத்தை எழுதி ஓர் ஆளிடம் கொடுத்தனுப்பிவிட்டு, தானும் கேம்புக்குப் போய் விட்டான்.

லக்ஷ்மி சாயந்திரம் இனிமையாய் பாடிக்கொண்டிருந்தாள். விஜயலக்ஷ்மிக்கு லக்ஷ்மியின் பேரில் வெகு ஆசை. தன் சிநேகிதிகள் இருவரைப் பாட்டுக் கேட்க வரும்படி அழைத்திருந்த படியால், அவர்களும் வந்திருந்தார்கள். அவர்களுடன் லக்ஷ்மியை பற்றி வெகு பெருமையாய்ப் பேசிக்கொண்டு இருந்தாள். அப்பொழுது ஓர் ஆள் கடிதம் கொண்டுவந்துக் கொடுத்தான். அது ராஜனுடைய கையெழுத்தாக இருந்தபடியால், "நாம் அவ்விடம் இருக்கும் பொழுதே அவன் கேம்புக்குப் போய்விட்டானே. திரும்பி வந்திருக்கிறான்போலும்! என்ன விசேஷமோ? உன்னைவிட்டு ஒரு நிமிஷமும் அவனால் இருக்க முடியவில்லைப் பார். கடிதமும் எழுதிவிட்டான்!" என்று லக்ஷ்மியை பார்த்து சிரித்துக்கொண்டே கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். ஆனால் அவள் எண்ணின எண்ணத்திற்கு விரோதமாக இருக்குமென்று அவளுக்குத்தெரியாது.உடனே அவள் முகமாறுதலைக் கண்ட லக்ஷ்மி கலவரத்துடன் என்னவென்று விசாரித்தாள். விஜயலக்ஷ்மி அவள் கலவரத்தைக் கண்டு சமாளித்துக்கொண்டு "ஒன்றுமில்லை, ஆபீஸ் விஷயமாய் வந்தானாம். திரும்பவும் போவதாய்த் தெரிவித்திருக்கிறான்" என்று சொல்லிவிட்டாள்.

அன்றய ராத்திரி வேலைகள் முடிந்ததும் விஜயலக்ஷ்மி லக்ஷ்மியைக் கூப்பிட்டு சமாசாரங்களை எல்லாம் தெரிவித்தாள். ஆனால், அவள் இந்தமாதிரி அபவாதத்தைக் கனவிலும் எதிர்பார்த்தாளில்லை. பாவம்,என்ன செய்வாள்? இதைப்பற்றி தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், நேரில் சங்கதிகளை விசாரிப்பதாயும் சொன்னாள். அதற்கு விஜயலக்ஷ்மி "லக்ஷ்மி! அவன் குணம் உனக்குத் தெரியாது. அவன் ஒரு பிடிவாதக்காரன். என்ன எழுதியிருக்கிறானோ அப்படியேதான் செய்வான். ஆதலால், இனிமேல் ஆகவேண்டிய கார்யத்தைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்றாள்.

"அக்கா, இந்த மாதிரி அபவாதங்கள் வந்து இனி நான் ஜீவித்திருப்பது கூடாது. மனிதர்களுக்கு, அதிலும் முக்யமாய் ஸ்திரீகளுக்கு, மானம்தான் பெரிய ஆபரணம். அதுபோன பிறகு ஜீவித்திருப்பது பிசகு. ஆனால் எப்படியாவது நான் நிரபராதி என்று நிரூபித்து விடுவேன். அதுவரையில் இந்தக் கட்டையில் என் ஆவி இருக்கும். ஆனால், இதை நிரூபிக்கும் வரையிலும் நான் எவ்விடம் போவேன்? என்னால் உங்களுக்கு அவமானம் கொண்டு வந்து வைக்க இஷ்டமில்லை. நீங்கள் என்பேரில் பிரியமாக இருப்பதாலும், சந்தேகிக்காதபடியாலும் நான் இதற்கு மேல் என்ன செய்யவேண்டுமென்பதை உபதேசம் செய்யுங்கள்" என்று லக்ஷ்மி மனம் புண்ணாகிக் கூறினாள்

விஜயலக்ஷ்மிக்கு கிராமப் பித்து அதிகம். தனக்குஸ்ரீ தனமாய்க்கொடுத்ததையும் கிராம சேவைக்காகக் கொடுத்திருக்கிறாள். லக்ஷ்மிக்கு இதே உபதேசத்தைச் செய்ய எண்ணி "லக்ஷ்மீ, நீ வருத்தப்படவேண்டாம். என்னால் ஆனவரையில், உனக்குப் பணம் கொடுக்கிறேன். எனக்குத் தெரிந்தது ஒரே ஒரு நல்லவழிதான். அது கிராம சேவைக்காக உழைப்பது. உன் தர்மங்கள் உன்னை ரக்ஷிக்கும். உன்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நான் இந்த விஷயத்தைப்பற்றி என்னவென்று ஆராய்ந்தேன். நீ சத்யமாய் நடந்திருப்பாயின் உன் சத்யமே உன்னைக் காக்கும். சந்தோஷத்துடன் இருப்பாயாக. தர்மத்தின் பலன் எப்பொழுதும் வீணாகாது" என்று ஆசீர்வதித்தாள்.

நாள்கள் சென்றன. மாதங்களும் சென்றுகொண்டு வருஷத்தை எட்டிப் பிடிக்க இரண்டு மாதங்கள் இருந்தன. ராஜனோ இந்த வருத்தம் தாளமுடியாமல் குடிப்பதில் இறங்கினான். விஜயலக்ஷ்மி அடிக்கடி அவனைப் பார்த்து அனியாயமாய்க் கெட்டுப் போகவேண்டாமென்றும் சொன்னாள் கடிதங்களுடைய சமாசாரங்களைப் பற்றிக் கேட்டும் நிஷ்ப்ரயோஜனமாய்ப் போய் விட்டது. ஒரு நாள் அவனுக்குத் தெரியா

மலே லக்ஷ்மியின் அறையைச் சோதித்தாள். கடிதம் ஒன்றும் அகப்படவில்லே. தன் அருமையான தம்பி இப்படிக் கெட்டுப் போவதைப் பற்றியும், ஓர் நிரபராதியின் பேரில் அநியாயப் பழி சுமத்தப்பட்டிருக்கிறதைப் பற்றியும் அவள் வெகு வருத்த மடைந்தாள். இதை யாரிடமும் சொல்லாமல் எப்படியாவது இவர்களேச் சீர்படுத்தவேண்டுமென்று சதா யோசிப்பாள்.

லக்ஷ்மி, அமராவதியில் கிராம ஜன முன்னேற்றத்திற்காகச்சிரமப்பட்டு உழைத்தாள். குடியானவர்கள் பிரச்னையைத் தீர்க்க முயற்சி செய்துகொண்டு இருந்தாள். இது சம்பந்தமாய் கலவரங்கள் அதிகமாகவே சப்கலெக்டரால் அனுப்பிய போலீஸ் தடுத்தும் முடியாதபடியால், 'லாட்டி'யால் அவர்கள் எல்லோரையும் அடிக்கவே, கூட்டத்தில் இருந்த லக்ஷ்மிக்கு தலேயில் அடி பலமாய்ப் பட்டது. உடனே அவளே குண்டூர் ஆஸ்பத்ரிக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். டாக்டர் பார்த்து காயம் பலமாய் பட்டிருக்கிறதென்றும் பிழைப்பதே சந்தேகமென்றும் தெரிவித்தார்.

லக்ஷ்மிக்கு அன்று இரவு கொஞ்சப் கொஞ்சமாய் பிரக்ஞை வந்தது. கண்ணேத் திறந்தாள். பக்கத்தில் 'நர்ஸ்' இருப்பதைப் பார்த்து தாகமென்று சொல்லி தீர்த்தம் வாங்கிச் சாப்பிட்டாள்.

ஒன்றின்பின் ஒன்ருய் பழைய நினைவுகள் தோன்றி துயரத்தைக் கொடுத்தன. அந்த சமயத்தில் தான் செய்யத் தவறி விட்ட ஓர் விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. உடனே விஜயலக்ஷ்மிக்குச் சொல்லி அனுப்பினுள். விஜயலக்ஷ்மி தன் கணவனுடன் வெகு கலவரத்துடன் வந்து சேர்ந்தாள். லக்ஷ்மியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவளேத் தடவிக்கொடுத்தாள். லக்ஷ்மியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் பெருகிக்கொண்டு இருந்தது. நடந்த சங்கதிகளே அறிந்த விஜயலக்ஷ்மி, "லக்ஷ்மீ ஏன் வருத்தப்படுகிருய்? எல்லாம் ஈசன் செயல். உனக்குச் சீக்கிரம் குணமடைந்துவிடும். பயப்படாதே" என்று அன்பு ததும்பச் சொன்னுள்.

"அக்கா, நான் என் பிராணனுக்காகப் பயப்படவில்லே. ஆனுல் நான் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்ற முடியாமல் போய்விடுமோ என்ற பயந்தான். நான் நிரபராதி என்று பகவானுக்கு நன்ருய்த் தெரியும்; ஆனுல், என் கணவனுக்கு தெரியவில்லே. ஒரு வேளே நான் இப்பொழுதே இறந்து விட்டேனுனல், எனக்கு மேல் வந்திருக்கும் அபகீர்த்தி அழியாமல் நின்றுவிடும். அதுதான் எனக்கு வருத்தம்" என்ருள். விஜயலக்ஷ்மி அவள் நோக்கத்தைக்கண்டு, அதிகமாய்ப் பேசவிடாமல் அவளுக்குத் தைரியம் சொல்லி, மனதையும் சாந்தமாய்வைத்துக் கொள்ளும்படி சொன்னுள்.

"அக்கா, நீங்கள் சொல்லுகிறபடி நடக்கிறேன். ஆனுல்,எனக்காக ஒரு உபகாரமும் உங்கள் கையினுலே ஆகவேண்டி இருக்கிறது. அது என்னவென்ருல் என் சிநேகிதி வசுமதி என்பவளுக்கு-புகையிலேக் கம்பெனியின் மானேஜர் ஸ்ரீனிவாஸய்யரின் மனேவி—நான் ஊரிலிருந்து இவ்விடம் வரும்பொழுது, அவள் தாயார் ஒரு பெட்டி கொடுத்து அவளிடம் சேர்க்கும்படி சொன்னுள். நான் வந்தவுடன் விசாரித்ததில், அவர்கள் முக்கிய அலுவலே முன்னிட்டு ஊருக்குப் போயிருப்பதாய்த் தெரியவந்தது. இப்பொழுது அவர்கள் வந்துவிட்டிருந்தால், உங்கள் தம்பி வீட்டில் ரங்கூன் சூட்கேஸ் ஒன்று இருக்கும். அதை அவர்களிடம் சேர்த்துவிடவும்" என்று பிரார்த்தித்தாள். விஜயலக்ஷ்மியும் சேர்த்து விடுவதாய் வாக்களித்தாள்.

அன்றைய ராத்திரி முழுவதும் லக்ஷ்மி மிகவும் உபாதைப்பட்டுக்கொண்டும் புரண்டுகொண்டு மிருந்தாள். டாக்டர், இஞ்ஜக்ஷன் கொடுத்து விடியற்காலேயில் லக்ஷ்மியைத் தூங்கச் செய்தார்

அப்பொழுதே தன் தம்பியினிடம் சொன்னுல், இரக்கம் கொள்வானேவென்றெண்ணி விஜயலக்ஷ்மி அவனிடம் சொன்னுள்.

ராஜன் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு இருந்தான். எதிர்பாராமல் அவள் வருகையைக் கண்டு திகைத்தவனுய், "இவ்வளவு காலேயில் வர விசேஷமென்ன? பழைய ராமாயணங்களேப் பாட

ஆரம்பிக்கவோ?” என்று தடுமாற்றத்துடன் கேட்டான். விஜயலக்ஷ்மி அவன் படபடப்பை அறிந்து, லக்ஷ்மியைப்பற்றிச் சொன்னால் எரிந்து விழுவானாகையால் சாமர்த்தியமாய் சமாசாரத்தைத் தெரிவிப்பதுதான் நலமென்றெண்ணி, “ஒன்றுமில்லை, நேற்று ஜமீன் கலகத்தில் ஒரு பெண் அடிபட்டு, ஆஸ்பத்திரியில் இருக்கிறாளல்லவா, அவள் என்னை வரும்படி ராத்திரியே சொல்லி அனுப்பினாள். போய் இப்பொழுதுதான் வருகிறேன், பாவம்! அவள் ஸ்திதியைப் பார்க்க வெகு பரிதாபமா யிருக்கிறது. என்ன செய்யலாம்? அவள் வேண்டுகோளின்படி தான் இவ்விடமும் வந்தேன். ஏதோ அவள் சிநேகிதியின் பெட்டியாம் ஒன்று, இவ்விடம் இருப்பதாய்த் தெரிவித்தாள். அதைக் கொண்டு போய் அவளிடம் சேர்க்க வேணும்” என்றாள். இதைக் கேட்ட ராஜன் “எந்தப் பெண்ணின் பெட்டி? உனக்கு மூளை கலங்கி விட்டதா என்ன? உளறுகிறாய்?” என்று கர்ஜித்தான். விஜயலக்ஷ்மி “இல்லைப்பா! எனக்கு மூளை கலங்கவில்லை. காயம் பட்ட பெண்ணின் ஸ்நேகிதியின் பெட்டியாம். புகையிலைக் கம்பெனி மானேஜர் ஸ்ரீனிவாஸய்யரின் மனைவி வசுமதியைச் சேர வேண்டியதாம். தான் ஊரிலிருந்து இவ்விடம் வரும் பொழுது தன் சிநேகிதியின் தாயார் ஒரு ரங்கூன் சூட் கேஸ் கொடுத்து, தன் பெண்ணிடம் சேர்க்கும்படி சொன்னாளாம். வந்தவுடன் விசாரித்ததில் சிநேகிதி ஊரிலில்லை என்று தெரிய வந்ததாம்” என்று நிதானமாய்ச் சொன்னாள்.

யாவற்றையும் கேட்டு முகமாறுதலடைந்த ராஜன், “எனக்கு ஒன்றுமே புரியவில்லை; எந்தப் பெண்ணுக்கு அடிபட்டது? அவள் உனக்கு எப்படித் தெரியும்?” என்று பதட்டத்துடன் கேட்டான்.

அதற்கு விஜயலக்ஷ்மி “அடிபட்ட பெண் உன் மனைவி லக்ஷ்மி” என்று பதிலளித்தாள்.

ராஜன் ஒரு கணம் மலைத்து நின்றான். “அது லக்ஷ்மி பெட்டி இல்லையா? சிநேகதி பெட்டியா அது? ஐயோ! என்ன முட்டாள்தனத்தைச் செய்து விட்டேன்” என்று ஐ. ஸி. எஸ். ஆக இருந்தும் தன் முட்டாள்தனத்தை ஒப்புக் கொண்டு தவித்தான் ராஜன்.

எப்போது லக்ஷ்மி நிரபராதி என்ற முடிவுக்கு வந்தானோ அப்பொழுது என்ன செய்தானென்று சொல்ல வேண்டுமா? சர்க்காரின் முடிவுகளை நிறைவேற்றி வைக்கும் ஸப் கலெக்டருக்கு தன் முடிவை நிறைவேற்றி வைப்பது பிரமாதமா என்ன? உடனே ராஜன் விரைந்தோடினான் ஆஸ்பத்திரிக்கு.

தீபாவளியும் வந்தது. சப்கலெக்டர் வீட்டில் தடபுடல். ஊரிலிருக்கும் ஹரிஜனச் சிறுவர்களுக்கு வஸ்திரங்களும், தின்பண்டங்களும் வழங்கப்பட்டன. அந்தச் சுப வேளையில் ராஜனும் லக்ஷ்மியும் புதுவாழ்வு என்ற மாளிகையை அமைக்க அஸ்திவாரம் போட்டு விட்டார்கள்.



# *உயர்வு மனப்பிராந்தி

[ஸ்ரீ வி. எஸ். ராமகிருஷ்ணன்]

முதன் முதலில் மூளையைக் குழப்பி விட்டுக் கொள்வதற்கு நண்பர்கள் தயாராக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சமீபகாலத்தில் ஐரோப்பாவில் நடக்கும் சமாசாரங்களைப் பார்த்துக்கூட நமது மூளை குழப்பமடையவில்லை என்றாலும், நான் கூறப்போகும் விஷயம் மூளையைப் பற்றியதாதலால் கொஞ்சம் குழப்பத்தை உண்டாக்கலாம்.

ஆங்கிலத்தில் ஸுபிரீயாரிடி காம்ப்ளக்ஸ் என்ற வார்த்தை இருக்கிறதே, அதிலுள்ள காம்ப்ளக்ஸ் என்ற பதம் பெரிய அறிஞர்களுக்கு எவ்வளவு பெரிய குழப்பத்தைக் கொடுத்திருக்கிறதென்று பாருங்கள். ஹார்ட் என்ற மேதாவி அதற்கு, 'உணர்வு' என்று பொருள்பட அர்த்தம் கூறுகிறார். ஆனால் ரிவர்ஸ் என்பவர் அது ஒரு உணர்வு அல்ல, திடீரென்று ஏற்படக் கூடிய கிறுக்குத்தனம் என்கிறார். ஆனால், டெய்லர் என்பவர் மேற்சொன்ன இரண்டுமில்லை; அது பழக்கத்தால் ஏற்படும் பலவீனம் என்கிறார். ஆகவே இந்த காம்ப்ளக்ஸ் என்ற வார்த்தை ஆங்கில அறிஞர்களையே ஒரு குழப்பு குழப்பி விட்டதைப் பார்க்கும்போதுதான் நாமும் குழப்பமடையலாம் என்று கூடத் தோன்றுகிறது. ஏனென்றால் காம்ப்ளக்ஸ் மூளையைப்பற்றிய விஷயமல்லவா?

ஆனால், குழப்பிக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டுமென்று சொன்னேனே யொழிய, நாமும் குழம்பவேண்டுமென்று சொல்லவில்லை. ஏனென்றால் ஒரு நொடியில் ஸுபீரியாரடி காம்ப்ளக்ஸ் என்பதற்கு அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளலாம். ஸுபீரியாரடி காம்ப்ளக்ஸ் என்பதற்கு தமிழில் உயர்வுமனப்பிராந்தி என்று அர்த்தம். உயர்வு மனப்பிராந்தி என்பதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டால் 'ஸுபீரியாரடி காம்ப்ளக்ஸ்' என்று ஒரே போடாகப் போட்டுவிடலாம். நாம் குழப்பமடைந்து உளறுவோம் என்று யாராவது நினைத்தால் ஏமாற வேண்டியதுதான்.

இப்போது, உயர்வுமனப்பிராந்தி யென்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். மாக்டகல் முதலிய பிரபல மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் என்ன கூறுகிறார்களென்று பார்ப்போம். பொதுவாக மனப்பிராந்தியே ஓர் அசாதாரண சம்பவம் என்பது அவர்கள் கருத்து. ஆகையால், உயர்வு மனப்பிராந்தி என்பதும் ஓர் வியாதி. மனிதன் வாழ்க்கைப் போரில் அடிக்கடி தோற்றுப்போய் அதனால் ஏற்பட்ட பலவீனத்தை மறைத்துக் கொள்ள முயல்கிறான். அந்த சமயத்தில் அவன் எல்லோரைக் காட்டிலும் தான்உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டு—உண்மையில்தன் தோல்வியில் அதிர்ச்சியடைந்தவனாய்—பேசுகிறான், நடந்து கொள்கிறான். இப்படி நரம்பு அதிர்ச்சியடைந்த மனிதனின் மனப்போக்கைத்தான் உயர்வு மனப்பிராந்தி என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த உயர்வு மனப்பிராந்திக்கு உள்ளானவன் தன்னைப்பற்றி சிந்தனை செய்ய முடிவதில்லை; அவனுக்கு நகைச்சுவையும் கிடையாது. தன் குறைபாடுகளை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் நடக்கவும் தெரியாது. பைத்தியம் பிடித்தவன்மாதிரி, ஏன், பைத்தியம் பிடித்தவனாகவே தான் எல்லோரைக் காட்டிலும் மேலானவன் என்ற ஒரே நினைப்பால் உந்தித் தள்ளப்பட்டு காலத்தைக் கழிக்கிறான். இவ்வித மனோபிராந்தி அவனுக்குப் பழக்கமாகி விட்டது; மேலும் அவனிடம் வளர்ந்து வருகிறது. அதை அவனால் மாற்றவோ தடுக்கவோ முடியாது; அவனைக் கடவுள் தான் காப்பாற்றவேண்டும். இப்படிப் பட்ட துயரம் கொடுக்கும் முறையில் உயர்வு மனப்பிராந்தியைப்பற்றி பாஷ்யம் செய்துவிட்டார்கள் மனோதத்துவ

*19-6-39ல் சென்னையில் செய்த ரேடியோ பிரசங்கம்.

துவ சாஸ்திரிகள். இதைப் படித்த நபரிடம்போய், 'ஐயா! உமக்கு உயர்வு மனப்பிராந்தி வந்து விட்டது ஜாக்கிரதை,' என்று கூறினல் உடனே அவர் சத்தப்படாமல் தூக்குப்போட்டுக் கொண்டு விடுவார் என்பதில் சந்தேக மில்லை. உயர்வு மனப்பிராந்தி என்ருல் ஓர் பிசாசு என்று நம்பும்படி பாஷ்யக்காரர்கள் செய்து விட்டார்கள். ஆனல் மேற் சொன்ன துரதிருஷ்டம் ஏற்படக்கூடா தென்றுதானே என்னமோ, அந்த வார்த் தை வேறு ஒரு அர்த்தம் பொதுவாகப் பரவி இருக்கிறது.

சாதாரணமாக, தன்னுடைய திறமை யைப் பற்றி ரொம்ப பிரமாதமாக எண்ணி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பவர்களு க்கு மேற்சொன்ன வார்த்தையை உப யோகிக்கிருேம். இதற்கு உதாரணமாக நம்மையே எடுத்துக் கொள்ளலாம். "ஆமாம்! மனேதத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிற அர்த்தத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமாக்கும். நாம் சொல்லு கிற அர்த்தத்தை அவர்கள் தான் எடுத்துக் கொள்ளட்டுமே" என்று எண்ணுகிருே மல்லவா? இதுதான் உயர்வு மனப் பிராந்தி.

இப்படிப்பட்ட உயர்வு மனப் பிராந்தி தோட்டி முதல் தொண்டமான் வரையில் சகலரிடமும் இருப்பதைக் காண்கிருேம். நான் அன்று ஓர் எழுத்தாளரைச் சந்திக்க நேர்ந்தது. என்றுமில்லாத திருநாளாக அவர் தம்மைப் பற்றி கொஞ்சம் உத்சாக மாகப் பேச ஆரம்பித்தார். உயர்வாக தம் மைப்பற்றிப் பேசுவது அவருக்கு வழக்க மில்லை என்ருலும், இத்தனை நாளாய் அவர் மனதில் ஒளிந்திருந்த உயர்வு மனப் பிராந்தி தலையைக் காண்பித்ததைப் பார்த் தேன்.

"ஸார்! எவ்வளவோ பேர்கள் எழுது கிருர்களே! ஒவ்வொருவருக்குக் கதை எழுதுவதென்ருல் ஒரு மாதம் பிடிக்கும். நான் பத்தே நிமிஷங்களில் கதை எழுது கிற வழக்கம்" என்று உணர்ச்சியுடன் கூறினர். அவர் எண்ணத்தில் ஆற அமர யோசித்து, திருத்தி அடித்து, மறுபடியும் அழகு படுத்திக் கதை எழுதி முடிப்ப தென்பது அசட்டுத்தனமான காரியம். ஆனல் பத்தே நிமிஷத்தில் கதை எழுதுவ தென்பதை யாராலும் செய்ய முடியாத அரிய வித்தையாகக் கருதி யிருந்தார். எல்லோரும் செய்கிற அசட்டுத்தனத் தைச் செய்யாமல் ஓர் அரிய காரியத்தைச் செய்துவிட்டதாகக் கூறி உயர்வை எண்ணி தாமே சந்தோஷப்பட்டுக் கொண்டார். இந்த சமயத்தில் அவருக்கு உத்சாக மூட்டவேண்டுமல்லவா?

"என்ன பத்து நிமிஷத்திலேயா கதை எழுதிவிட்டீர்கள்?" என்று கேட் டேன்.

"ஹூம்! நன்ருய் கேட்டீர்கள்! அது பிரமாதமா என்ன? ஒருநாள் ஆபீசுக்குப் போகும்போதே ஐந்து நிமிஷத்தில் ஒரு கதை எழுதி யிருக்கிறேனே. ரயிலில் போகும்போது ஓர் நாவல் எழுதி முடித் திருக்கிறேன், ஸார்" என்று புளகாங் கிதத்துடன் கூறினர். ஆனந்தத்தில் மூழ்கியிருந்த அவரைக் கேள்விகள் கேட்டு கரையேற்ற நான் அப்போது விரும்ப வில்லை.

பொதுவாக, எழுத்தாளர்களுக்குத்தான் ரொம்ப உயர்வு மனப்பிராந்தி இருப்பதாக பல அரசியல் தலைவர்கள் சொல்லுகிருர் கள். தாங்கள் எழுதும் தலையங்கங்களா லும் புஸ்தகங்களாலும்தான் உலகம் சுற்றிக்கொண்டிருப்பதாக அவர்கள் எண் ணுவதாக தலைவர்கள் கூறுகிருர்கள். ஆனல், தலைவர்களுக்குத் தான் உயர்வு மனப்பிராந்தி இருக்கிறதென்றும் அவர் கள் வெளியிடும் அறிக்கைகளே இதற்கு ருஜுவாகுமென்றும் எழுத்தாளர் கள் சுட்டிக் காண்பிக்கிருர்கள். இவர்கள் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த் தால் உயர்வு மனப்பிராந்திக்கு இவர்களும் மனேதத்துவ சாஸ்திரிகளைப்போல் பொல் லாத அர்த்தம் கற்பிப்பதாய்த் தெரிகிறது. ஆனல் நம்முடைய உயர்வு மனப்பிராந் தியை விட்டுக் கொடுக்காமல் நமது அர்த் தத்தையே நாம் அனுசரிக்கவேண்டும்.

எழுத்தாளர்கள், தலைவர்கள் ஒருபுற மிருக்கட்டும்; மிகவும் சாமான்யரிடத்தி லும் உயர்வு மனப்பிராந்தியைக் காண்கி ருேம். அன்று ஒரு ரிக்ஷாக்காரன் தன் பிரதாபத்தைச் சொன்னன். ஒரு பர்லாங் தூரம் ஒரு பிரஞ்சுக்காரனைக் கொண்டு

போய் விட்டதற்காக அவனிடமிருந்து ஒரு ரூபாய் வாங்கிவிட்டதாகவும் அது மாதிரிக் காரியம் வேறு யாராலேயும் செய்யமுடியுமா வென்றும் என்னைக் கேட்டான். "முடியாதப்பா! நீ கெட்டிக்காரன் தான்" என்று ஒப்புக்கொண்டேன். பட்டணத்திற்குப் புதிதாய் வந்த ஆசாமியிடமிருந்து ஓர் ரூபாய் கொள்ளை யடித்ததில் அவன் அடைந்த சந்தோஷம், பாக்கிப் பேரால் அது மாதிரிச் செய்ய முடியாது என்பதை நினைக்கும்போது உண்டான உயர்வு மனப்பிராந்தியால் பன்மடங்கு அதிகமாகிறது.

இவ்வித உயர்வு மனப்பிராந்தி எல்லோருக்கும் இருக்க முடியாது. ஒன்றும் தெரியாத அசட்டுப் பேர்வழி தன்னைப்பற்றி உயர்வாக எண்ணிக்கொண்டால் அவன் நகைப்புக்கிடமாவது மட்டுமல்ல; ஆபத்துக்குள்ளாகிறான்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் வெகு நாளைக்கு முன் பத்திரிகையில் படித்த ஓர் குட்டிக் கதை நினைவிற்கு வருகிறது. ஓர் பட்டிக்காட்டான் ஊருக்குப் போவதற்காக தஞ்சை ரயிலடிக்கு வந்தான். அந்த சமயத்தில் ஓர் போர்ட்டர் "ஏனப்பா, எந்த ஊருக்கு நீ போகவேண்டும்?" என்று கேட்டான். பட்டிக்காட்டானுக்கு அந்த சமயத்தில் பொல்லாத தலைக்கிறுக்கு உண்டாயிற்று. "இவனைக் காட்டிலும் நான் எந்த விதத்திலே தாழ்ந்தவன்? இவன் கேட்கிற கேள்விக்கு நான் பதில் சொல்லுவதாவது?" என்று நினைத்து "நான் திருச்சி போகிறேன்" என்றான். உண்மையில் அவன் மாயவரம் போகவேண்டியவன்! "அப்படியானால் அந்த ரயிலில் ஏறிக் கொள்" என்றான் போர்ட்டர். பட்டிக்காட்டான் அவன் குறிப்பிட்ட ரயிலில் ஏறிக் கொண்டான். இரண்டு ஸ்டேஷன் போனதும் அவனுக்கு விஷயம் விளங்கிற்று!

உண்மையில், பட்டிக்காட்டானுக்கு விஷயம் தெரிந்திருந்தால் அவன் உயர்வாக எண்ணிக்கொண்டிருக்கலாம்; அதனால் பரவாயில்லை. ஆனால் ஒன்றுமே தெரியாமல் இருக்கும்போது எல்லோரைக் காட்டிலும் நான்தான் கெட்டிக்காரன் என்று எண்ணிக் கொண்டிருப்பது தர்ம சங்கடம். ஆகையால் உயர்வு மனப்பிராந்தியை வருவித்துக் கொள்ளுமுன் கொஞ்சம் கெட்டிக்காரத் தனத்தையும் சம்பாதித்துக் கொள்வது அவசியமாகிறது.

இப்பொழுது ஒரு மனிதருக்கு உயர்வு மனப்பிராந்தி இருக்கிறதா என்பதை எப்படித்தெரிந்துக்கொள்வதென்று கவனிக்க வேண்டும். இது தலைக்கிறுக்காகப் பேசுவர்களிடம் மட்டுந்தான் இருக்கிறதென்று நாம் தீர்மானிக்க முடியாது. அதே மாதிரி தலைக்கிறுக்காகப் பேசுபவர்கள் எல்லோரிடமும் இது இருக்கிறதென்றும் நாம் கூற முடியாது. ஒருவரது பேச்சினால் நாம் கண்டு பிடிக்கக்கூடிய குணமல்ல இது. நடை உடை பாவனைகளால்கூடத் தெரிந்து கொள்ள முடியாது.

உதாரணமாக எனக்குத் தெரிந்த ஓர் கனவானை ஏதாவது யோசனை கேட்கப் போவதுண்டு. "அடாடா! என்னை வந்து அதெல்லாம் கேட்கிறாயே. எனக்கு என்ன தெரியும்? ஏதோ ஒரு அசடு மூலையிலே காலத்தைக் கழிக்கிறேன்" என்று வெகு தாழ்மையாகப் பேசுவார். உண்மையில் அவர் அசடல்ல; தாழ்மையானவருமல்ல. தன்னைப்பற்றி உயர்வாக எண்ணி அவஸ்தைப் பட்டுக்கொண் டிருப்பவர்தான். ஆனால் அவர் மனப்பிராந்தியை பேச்சைக் கொண்டு தீர்மானித்துவிட முடிகிறதா? ஒவருடன் நன்றாகப் பழகிய பிறகு தான் தீர்மானிக்க வேண்டும்.

இந்த உயர்வு மனப்பிராந்தி உண்டாவதற்கு என்ன காரணங்கள் என்று தெரிந்து கொள்ளவேண்டும். சில பேர்கள் விஷயத்தில் அது உடம்போடு கூடப் பிறந்ததாகவே இருக்கிறது. பிரசித்திபெற்ற ஆசிரியர் ஆட்லர் எழுதிய ஓர் புத்தகத்திலுள்ள உதாரணம் இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. மூன்று குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஒரு தாயார் மிருகக் காட்சிச் சாலைக்குப் போனாள். அங்கே ஒரு சிங்கத்தைப் பார்த்து குழந்தை அம்மாவுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு "அம்மா! வீட்டுக்குப் போவோமா?" என்று கேட்டது. இன்னொரு குழந்தை, "எனக்கு இப்போ பயமாவே இல்லை" என்றது. "அந்தச் சிங்கத்தின் மூஞ்சியில் காறித்துப்பட்டுமா?" என்று கேட்டது மூன்றா

வது குழந்தை. உண்மையில் மூன்று குழந்தைகளுக்கும் நடுக்கந்தான். ஆனால் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து விடாமல் தைரமாய் இருப்பதாகக் கூறி தங்கள் உயர்வு மனப்பிராந்தியைக் காண்பித்தன. இந்தச் சிறு குழந்தைகளுக்குள் இவ்வித மனப்பிராந்தி இருப்பதைப் பார்க்கும்போது, அது உடம்போடு பிறந்ததாகவே தோன்றவில்லையா ?

வாழ்க்கையில் தோல்வியுற்று அதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தைப் போக்க உயர்வு மனப்பிராந்தியை வருவித்துக் கொண்டவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுவதுபோல் பயித்தியக்காரர்களாயிருக்கவில்லை. தன்நம்பிக்கையை இழந்துவிடாமல் இருக்கத்தான் உயர்வு மனப்பிராந்தியை ஓர் உதவியாகப் பெற்றிருக்கிறார்கள்.

இன்னும் சிலருக்கு உயர்வு மனப்பிராந்தி பழக்கத்தால் ஏற்படுகிறது. ஒரு குடும்பத்தில் ஓர் குழந்தையை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தார்கள். அதை நல்ல அழகி அழகி என்று எல்லோரும் சொல்லவே, நாளடைவில் அந்தப் பெண்ணுக்கு தன் அழகில் அளவில்லாத நம்பிக்கை ஏற்பட்டு உயர்வு மனப்பான்மை வேரூன்றிற்று. கடைசியில் அப் பெண்ணுக்குக் கலியாணமாகவில்லை!

இந்த உயர்வு மனப்பிராந்தி நல்ல குணமா, கெட்ட குணமா என்ற கேள்வி எழுகிறது. ஒரு விதத்தில் நல்ல குணம் என்று தான் சொல்லவேண்டும். இந்த மனப்பிராந்தியால் மனிதனுக்கு முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆசையும், தன்நம்பிக்கையும், திறமையும் உண்டாகி வளர்கிறது. பொதுவாக, கொஞ்சம் கெட்டிக்காரர்களாயிருப்பவர்கள் தங்களைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொள்வது இயற்கையே யல்லவா ?

ஆனால், இந்த உயர்வு மனப்பிராந்தியால் அடிக்கடி தற்புகழ்ச்சியும் பரநிந்தனையும் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகையால் இதை எப்படி நற்குணம் என்று கூறுவது ? ஆனாலும் உயர்வு மனப்பிராந்தி ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் இருக்கவேண்டுமென்பது என் கருத்து. ஆமாம், கொஞ்சந்தான். அதிகமாகப் போய்விட்டால் மகா ஆபத்தாய்ப் போய்விடும். அது முற்றினால் அகம்பாவமாகவும் கர்வமாகவும் ஆகிவிடும். பிறகு எல்லோரும் உதாசீனம்தான். இவையெல்லாம் ஏற்பட்ட பிறகு ஆள் உருப்பட்டாப் போல்தான்!

தோல்வியும் கஷ்டங்களும் நிரம்பிய இவ் வுலகத்தில் தோல்வியின் துயரைப் போக்கவும், கஷ்டங்களின் பளுவை நீக்கவும் ஒரு வழி வேண்டும். உயர்வு மனப்பிராந்தியால் நாம் நம்பிக்கை இழந்துபோகாமல் தலை தூக்கி நிற்கலாமல்லவா ? "ஐயோ ! என்னால் ஒன்றும் முடியாது" என்று ஒருவன் பிரலாபிப்பதைவிட, "என்னால் முடியாதது உண்டா? பார்க்கிறேன் ஒரு கை" என்பது கொஞ்சம் தற்பெருமையாய் இருந்தால்கூட உத்சாகமூட்டுவதாக இருக்கிறது, பாருங்கள்.

கடைசியாக ஒரு வார்த்தை. என்னைப் போல ஒருவருக்கும் எழுதவோ பேசவோ தெரியாது என்ற உயர்வு மனப்பிராந்தியை இன்றும் நான் ரகஸ்யமாக அனுபவித்து வருகிறேன். அந்த உணர்ச்சியால் அபிவிருத்தி அடைந்து வருவதை உணர்கிறேன். ஆனால் நீங்கள் என்னைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள் என்று உயர்வு மனப்பிராந்தி கொண்டிருந்தால் அப்படியே எண்ணிக்கொண்டிருங்கள். நான் ஆக்ஷேபிக்கப் போகிறதில்லை. உயர்வு மனப்பிராந்தி நல்ல குணமாக இருக்கும்போது அது எல்லோருக்கும் பொதுவான குணமாகத்தான் இருக்கட்டுமே !

நமஸ்காரம்.

# இரட்டிப்புக் கூலி

(ஸ்ரீ. வி. பாலசுப்ரமணியம், பி. ஏ. (ஆனர்ஸ்)

தூங்குமூஞ்சியூரைப்பற்றி கேள்விப் படாதவர்கள் எஸ். ஐ. ஆர். கப்டில் விட்டு விடப்பட்டிருக்கிற கீழ்க்கண்ட ஸ்தலபுராணத்தைப் படித்து அதன் பெருமையை அறிந்து கொள்ளவும்.

"தூங்குமூஞ்சியூர் சரித்திரத்தில் பேர் போனது. போன நூற்றாண்டில், பிரசித்தி பெற்ற விடியாமூஞ்சி ராஜனின் நலைநகரமாக விளங்கியது. இங்கே இன்னும் குட்டிச்சுவர்களையும் சப்பாத்துக்கள்ளியையும் காணலாம். இவை இப்பொழுது இருக்கும் இடத்தில் முன் காலத்தில் கோட்டை கொத்தளங்களெல்லாம் இருந்தனவாம். இங்குள்ள சப்பாத்துமுள் காலில் குத்தினால் தீராத தலை வலியும் தீரும் என்கிறார்கள். வேட்டையாட விரும்புகிறவர்களுக்கு இங்குள்ள முசாபரி பங்களாவில் ஏராளமாக மூட்டைப்பூச்சிகள் கிடைக்கும். இது பிடிக்காவிட்டால், பக்கத்திலுள்ள மாந்தோப்புக்குப் போனால் செவ்வெறும்புகளை வேண்டியமட்டும் காணலாம்."

கிருஷ்ணன் பி.ஏ. கலால் சப் இன்ஸ்பெக்டர் தூங்குமூஞ்சியூர் முஸாபரி பங்களாவில் முகாம் போட்டிருந்தார். அவர் ஒரு இருபத்தி ஐந்து வயது பிரும்மச்சாரி. தன்கூட தனக்கு தூரபந்துவும், அனாதையுமான வாசு என்னும் ஒரு சிறுவனை சமையல் செய்து போடுவதற்காக அழைத்துக்கொண்டு வந்திருந்தார்.

காலை மணி எட்டு இருக்கும். கிருஷ்ணன் வெளியே போக 'டிரஸ்' பண்ணிக்கொண்டிருந்தார். வாசு ஒரு டம்ளரில் காபி கொண்டுவந்து மேஜையில் வைத்து விட்டு நின்றான். "ஏண்டா வாசு, 'அவுட் ஹௌஸு'க்கு வெளியிலே ஒரு 'பேபி' கார் நிக்கரதே, யாரு வந்திருக்கா?" என்று கேட்டார் கிருஷ்ணன். "யாரோ ரேவதி அம்மாளாம். வயஸு இருபதுதானிருக்கும். மதராஸிலே டாக்டருக்குப் படிக்கறாளாம். இங்கே கோட்டையெல்லாம பாக்க வந்திருக்காப்பலே இருக்கு" என்றான் வாசு. "என்ன தனியாகவா? இந்தக் காலத்துப் பெண்களுக்குத்தான் என்ன தைரியம்? ஆண் துணையில்லாமல் இந்தப் பொட்டக் காட்டுக்கு இருபது வயசுப் பெண் தனியாக வரதாவது?" என்று கேட்டுக்கொண்டே கிருஷ்ணன் காபியைக் குடித்துவிட்டு வெளியே புறப்பட்டார்.

பத்து மைலுக்கப்பால், ஒரு கிராமத்தில் அவருக்குக் கொஞ்சம் வேலை யிருந்தது. அதை முடிக்கச் சற்று நேரம் பிடிக்கும். வெய்யில் அதிகமாகு முன்பே திரும்பிவிட வேண்டுமென்று நினைத்து, கிருஷ்ணன் மோட்டார் சைகிளை சற்று வேகமாகவே விட்டுக்கொண்டு போனார். திடீரென்று பின்னால் மோர்ட்டார் 'ஹார்ன்' சபதம் கேட்டது. அப்பொழுதுதான் கிருஷ்ணனுக்குத் தான் ரோட்டின் மத்தியில் மோட்டார் சைகிளை விட்டுக்கொண்டு போவது தெரிந்தது. கொஞ்சம் கஷ்டத்துடன் ஒரு புறமாக ஒதுங்கினார். அடுத்த நிமிஷம், அவர் காலையில் பார்த்த பேபி கார் அவரைக் கடந்து சென்றது. அதை சுமார் இருபது வயதுள்ள அழகிய பெண்ணொருவள் ஓட்டிக்கொண்டு போனாள். அவள் தன்னைப் பார்த்து சிரித்த விதம் கிருஷ்ணனுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. தான் முறை தப்பி ரோட்டின் நடுவே போய்க்கொண்டிருந்ததைப் பரிகசிப்பது போலிருந்தது அவள் சிரிப்பு. கிருஷ்ணன் கொஞ்ச நேரம் மிகவும் சிரத்தையுடன் ரோட்டின் இடதுபுறமாகப் போய்க்கொண்டிருந்தார். அந்தப் பெண்ணின் ஏளனச் சிரிப்பு அவர் மனதை விட்டு இன்னும் அகலவில்லை.

பாதிதூரம் போனதும், அந்த பேபி கார் சாலையின் ஓர் புறத்தில் நின்றுகொண்டிருந்தது. அதை இங்கேயும் அங்கேயும் தட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள் ரேவதி. "ஏன், ஏதாவது என்ஜின் 'ட்ரபிளா'? நான் வேணா பாக்கட்டுமா?" என்று தன் சைகிளை நிறுத்திவிட்டுச் கேட்டார் கிருஷ்ணன். "வந்தனம். ஆனால்

நான் அப்படி ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தையல்ல. எடுத்ததுக் கெல்லாம் ஆண் உதவிவேண்டாம். நீங்கள் முன்னே போங்கள். நான் ஐந்து நிமிஷத்தில் உங்களைப் பிடித்துவிடுவேன். ஆனல், ரோட்டின் மத்தியில் மட்டும் போகவேண்டாம்'' என்று சொல்லிச் சிரித்தாள் ரேவதி. மீண்டும் அந்த ஏளனச் சிரிப்பு!

கிருஷ்ணனுக்கு வந்த கோபத்துக் களவில்லை. "இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான். ஆண்களென்றல் தூண்களுக்குச் சமமாக நினைக்கிருர்கள்'' என்று எண்ணிக்கொண்டே அவ்விடத்திலிருந்து புறப்பட்டார் கிருஷ்ணன்.

ஆச்சு. இன்னும் ஒரு மைல்தான் போக வேண்டும். ஆனல் அதற்குள் அந்த மோட்டார் சைகிள் தொந்திரவு கொடுக்க ஆரம்பித்தது. துப்பாக்கி வெடிப்பது போன்ற சப்தம். ஒரு முனகல். அவ்வளவுதான். மோட்டார் சைகிள் வேலை நிறுத்தம் செய்துவிட்டது. கிருஷ்ணனுக்கு, இந்த மோட்டார் சைகிளை விடத் தெரியுமே ஒழிய அதைப்பற்றி வேறென்றும் தெரியாது. அவருக்கு இந்த "மெக்கானிக்ஸி''லேயே மூளை போ தில்லை. கிருஷ்ணன் விடாமல் ஐந்து நிமிஷம் தலையைச் சொறிந்தார். உடனே ஒரு யோசனை தோன்றிற்று. தான் போக வேண்டி வந்த கிராமம் பக்கத்தில்தான் இருந்தது. வேறு வழியில்லை. மோட்டார் சைகிளைக் கையால தள்ளிக்கொண்டு போகவேண்டியதுதான்.

"சடக்'' கென்று "பிரேக்'' போட்டு காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினள் ரேவதி. அவள் கிருஷ்ணன் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை. நேராக மோட்டார் சைகிளிடம் சென்ருள். இதையும் அதையும் பிடித்துத் திருப்பினள். கிருஷ்ணனுக்கு எல்லாம் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் இருந்தது. "எல்லாம் சரியாயிருக்கு. இனிமேல் போகலாம்'' என்று சொல்லிவிட்டு ரேவதி தன் காரில் போய் உட்கார்ந்தாள். "புருஷாளாய்ப் பொறந்துட்டாலே தாங்கள் எல்லாம் தெரிஞ்சவான்னு நினைச்சுக்கிரு சில பேர். இந்த சின்ன 'ரிபேரை' சரிபண்ணத் தெரியலலே, இந்த அழகுலே பொறத்தியாருக்கு ஒதவி பண்ண ரெடி'' என்று ரேவதி அம்மாள் தன் பக்கத்தில் இருந்த நாயைப் பார்த்து கிருஷ்ணனுக்குக் கேட்கும்படி சொன்னுள். கிருஷ்ணன் தான் மோட்டார் சைகிளை "ஸ்டார்ட்'' பண்ணுவதில் மும்முரமாக ஈடு பட்டிருப்பதுபோல் பாசாங்கு செய்தார். அவர் மட்டும் திரும்பிப் பார்த்திருந்தால், அவள் பேச்சில் தொனித்த வெறுப்பும், அசட்டையும் அவள் அவரைப் பார்த்த பார்வையில் இல்லை என்பதை உணர்ந்திருப்பார்.

கிருஷ்ணன் தன் வேலையை முடித்துக் கொண்டு பங்களாவிற்குத் திரும்பினதும், நேராக வாசுவிடம் சென்று, "ஆமாம், வாசு, பக்கத்து பங்களாவிற்கு வந்திருக்கிராளே அந்த அம்மா கல்யாணமானவளா?'' எனருன். "இல்லை, படிப்பை முடித்துவிட்டுதான் கல்யாணம் பண்ணிக்கப்போரேன் என்று சொல்லிண்டிருக்கான்னு எங்க ஊரிலே பேச்சு'' என்ருன் வாசு. இதைக் கேட்டவுடன் கிருஷ்ணன் தன் மனதிலிருந்த ஏதோ பெரும் சுமை நீங்கினவர் போல பெருமூச்சு விட்டார்.

சாயந்திரம், 'டிபன்' சாப்பிட்டு விட்டு, கிருஷ்ணன் பக்கத்திலுள்ள ஆற்றங்கரையை நோக்கிப் புறப்பட்டார். "சார், அந்த அம்மா நாளைக்கு விடியற்காலம், ஆறுமணிக்குப் புறப்பட்டு மதராஸுக்குப் போகிருளாம்'' என்ருன் வாசு. அவன் கெட்டிக்காரப்பயல். தன் எஜமானனுக்கு 'அந்த அம்மா'ளைப் பற்றிய விஷயங்களைக் கேட்பதற்கு இஷ்டம் இருக்கிறதென்பதை அரை நிமிஷத்தில் தெரிந்து கொண்டான். "நாலுமணிக்கா?'' என்ருர் கிருஷ்ணன். "ஆம்'' என்று பதிலளித்தான் வாசு.

ஆற்றில் ஜலம் அதிகமில்லை. பாதி ஆற்றைக்கடந்து சென்று, ஒரு மணல் திட்டின் ஓரத்தில் ஓடும் நீரில் காலைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்கார்ந்தார் கிருஷ்ணன். அன்று காலையில் நடந்த சம்பவங்கள் அவர் மனதில் பலவித எண்ணங்களை உண்டாக்கின. "புஸ்தகத்தில் படிப்பதற்கும் வாழ்க்கையில் நடப்பதற்கும், எவ்வளவு வித்தியாசம்! நானும் எத்தனையோ நாவல்கள் படித்திருக்கிறேன். அவைகளிலெல்லாம், கதா நாயகி ஒரு

முரட்டுக் காளையினல் துரத்தப்படும் போதோ, அல்லது, மோட்டார்கார் அடியில் சிக்கிக் கொள்ளும் போதோ, கதா நாயகன் திடீரென்று தோன்றி அவளைக் காப்பாற்றுகிறான். ஆனால், இன்று காலையில் சம்பவித்ததெல்லாம் அதற்கு முற்றும் மாறாக அல்லவோ இருக்கிறது. நான் அவளுக்கு உதவி செய்யப்போய் அவமானம் அடைந்தது மல்லாமல், அவளிடமே உதவி வேண்டி நிற்கும்படி நேரிட்டதே. அவள் என்னை சுத்த உதவாக்கரை என்றல்லவோ எண்ணியிருக்கிறாள்" என்று எண்ணி பெருமூச்சு விட்டார் கிருஷ்ணன்.

ஆற்றின் ஓர் கரையில் கூலியாளொருவன் கை நிறைய ஜலத்தை அள்ளிக் குடித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கிருஷ்ணனுக்குச் 'சடக்'கென்று ஏதோ யோசனை தோன்றியது. சற்றுத் தயங்கினர். ஆனால் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "ஏ, இங்கே வா" என்று கையைத் தட்டி அந்தக் கூலியாளைக் கூப்பிட்டார் கிருஷ்ணன்.

விடியற்காலம் மூன்று மணிக்கு 'டிங், டிங்' என்று அலாரம்' அடித்தது. கிருஷ்ணன் உடனே எழுந்து அலாரத்தை நிறுத்திவிட்டு ஒரு நாவலை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். ஆனால் அவர் கண்ணின் நாட்டம் அந்தப் புஸ்தகத்தை விட அதிகமாக மேஜையின் மேலிருந்த கடியாரத்தின் மேல் இருந்தது. ஆச்சு, மணி மூன்றரை, மூணேமுக்கால்; நாலு ஆகப் போகிறது. கிருஷ்ணன் புஸ்தகத்தைக் கீழே எறிந்து விட்டுத் தயாராக உட்கார்ந்தார். அடுத்த நிமிஷம், ஒரு பெண்ணின் கூக்குரல் அவ் விடியற் காலத்தின் அமைதியைக் குலைத்தது. கிருஷ்ணன் பாய்ந்து சென்றார். வெளியில், பக்கத்து பங்களா வாசலில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அதனருகில் ரேவதி நின்று கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த சிறு பெட்டியைப் பிடுங்க யத்தனித்துக் கொண்டிருந்தான் கிருஷ்ணன் சாயந்திரம் ஆற்றங்கரையில் பார்த்த கூலியாள். கிருஷ்ணன் கொஞ்சமும் தாமதிக்கவில்லை. ஓடிச் சென்று தன் பலத்தை எல்லாம் சேர்த்து வைத்து அந்த ஆளின் கன்னத்தில் ஒரு குத்து விட்டார். இன்னொரு குத்துவிட கையை ஓங்கும் போது அடிப்பட்டவன் அங்கில்லை. மங்கலான சந்திரனின் ஒளியில் ஒரு உருவம் தூரத்தில் ஓடுவதைக் கண்டார் கிருஷ்ணன்.

"நல்ல சமயத்தில் நீங்கள் வந்தீர்கள். அந்தப் பெட்டியில்தான் என் கையிலுள்ள பணத்தை எல்லாம் வைத்திருந்தேன். அது போயிருந்தால் ரொம்ப கஷ்டமாயிருக்கும்" என்றாள் ரேவதி. "காலையில் நடந்த சம்பவங்களால் நீ என்னை ஒன்றுக்கும் உபயோகமில்லாத முட்டாள் என்று நினைத்துக் கொண்டிருப்பாயே என்ற எண்ணமே எனக்கு இரவெல்லாம் தூக்கம் வரவொட்டாமல் செய்தது. அதுவும் நல்லதாக ஆயிற்று. நீ கூச்சல் போட்டவுடன் ஓடிவர முடிந்தது" என்றார் கிருஷ்ணன். மறுநாள் சாயந்திரம் கள்ளுக்கடையில் ரஸமான பேச்சு நடந்தது. "ஆனாலும் அந்த ஐயன் அப்படிக் குத்துவிட்டிருக்க வேண்டாம். கன்னம் இன்னும் வலிக்கிறது. ஆனாலும் ரெண்டு ரூவான்னா சும்மாவா? இதிலே என்ன வேடிக்கேன்னா, அந்த அம்மாவும் அய்யாவும் தனித்தனியாசக்கூப்பிட்டு ஒரே வேலையைச் செய்யச் சொல்லி ஆளுக்கு ஒரு ரூபா குடுத்தாங்கோ. நான் நேத்து முளிச்ச மூஞ்சி நல்லமூஞ்சி" என்றான் விறகு வெட்டி வீராசாமி தன் நண்பன் குப்பனிடம்.

---




# யார்மேல் குற்றம்?

(ஸ்ரீ எஸ். எல். நாராயணன், பி. ஏ.)

ராமய்யரும், சங்கர அய்யரும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள். ராமய்யருக்கு கொஞ்சம் பூஸ்திதி உண்டு. அத்துடன், பணம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையும் உண்டு. அவருக்கு ஒரே ஒரு பிள்ளை. வெகுநாட்கள் கழித்து, பிறந்த குழந்தையாகையால், அவருக்கும் அவர் ஸம்ஸாரம் கோமதிக்கும கிச்சுவின்மேல் உயிர். கிச்சு, பள்ளிக்கூடத்திலிருந்து வர சிறிது நாழிகை ஆகிவிட்டால் கோமதி கண்ணீர் பெருக்குவாள். அய்யர் கிராமத்தைக் கலக்க ஆரம்பித்து விடுவார்.

கிச்சுவும் அடுத்தாத்து சிண்டுவும் சிநேகிதர்கள். என்ன பக்ஷணம் தனக்குக் கிடைத்தாலும் சிண்டுவுக்குக் கொடுக்காமல் தின்ன மாட்டான் கிச்சு. அப்படித் தின்றாலும், தட்டிப்பிடுங்கி தன் வாயில் போட்டுக்கொள்வான் சிண்டு. ஒருவரைக் காணமல் ஒருவர் அரை நிமிஷங்கூட இருக்கமாட்டார்கள். சாயந்திரம் இருவரும் சடுகுடு, கண்ணுப்பூச்சி, விளையாடுவார்கள். வீட்டுக்குப் போகும்போது இருவர் வேஷ்டிகளும் மண் படிந்துகிடக்கும். வீட்டுக்குச் சென்றதும் கிச்சுவின் தகப்பனர், தன் பையனைக் குளிப்பாட்டி, தூய வேஷ்டி உடுத்துவார். அடுத்தாத்து சிண்டுவை மனதுக்குள் வைது கொள்வார். தங்களில் யாராவது ஒருவர் தெருவை விட்டுப் போகவேண்டும் என்று முணுமுணுத்துக்கொள்வார். இப்படியாகக் கிச்சுவை தன் கண்ணுக்குள் வைத்து வளர்த்து வந்தார் ராமையர்.

சிண்டுவோ, ஆத்தில் தன் தாயார் இட்டதைச் சாப்பிட்டுவிட்டு, கோவிலுக்கு ஓடிவிடுவான். சங்கர அய்யரும் அவனைக் கவனிப்பதில்லை. அவர் தாலூகா ஆபீஸில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். அவர் வேலையே அவருக்கு தலைக்குமேல் இருந்தது. சிண்டுவோ சீக்கிரத்தில் துஷ்டப் பயல் என்று பேர் எடுத்தான். சிறுவர்களுக்குள் சிண்டு இல்லாத சண்டை இல்லேவே இல்லை. அவனைக் கண்டால் மற்ற பையன்களுக்குக் கொஞ்சம் பயம். தினம் ஒரு பையனுக சண்டைக்கிழுப்பான் சிண்டு.

ஒரு நாள் இரவு, தெருக் கோவிலில் கூட்டம் ஜேஜே என்று கூடி இருந்தது. காரணம் அன்று ஸ்ரீராம நவமி உத்ஸவம். பையன்கள் கூட்டத்துக்கும் விளையாட்டுக்கும் சொல்லவும் வேண்டுமா? மணி ஏழு இருக்கும். கிச்சு கையில் லட்டுடன் ஓடி வந்தான். வந்த மறு நிமிஷம் அந்த லட்டு காலியாகி விட்டது. அப்போது தான், சிண்டு எங்கிருந்தோ ஓடி வந்தான் கோவிலுக்குள். விஷயம் தெரிந்ததும், சிண்டுவுக்கு கோபம் வந்தது. வெடுக்கென்று கிள்ளினன் கிச்சுவை. அவ்வளவு தான், 'ஓ' என்று அலறிக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினன் கிச்சு. அவன் அழுகை சப்தம் கேட்கவே, திகிலடைந்து வெளியே வந்தார் ராமய்யர். "சிண்டு கிள்ளிட்டான்" என்று அழுதான் கிச்சு. அவ்வளவுதான் ராமய்யருக்கு கோபம் தாங்க முடியவில்லை. ஒரே பாய்ச்சலாகக் கோவிலுக்கு ஓடினர்; சிண்டுவைப் பிடித்திழுத்து நாலைந்து அடிகள் அடித்துவிட்டு முணுமுணுத்துக் கொண்டே வீட்டுக்கு வந்தார். இதற்குள் கோமதி, வாசலில் நின்றபடியே, வாயில் வந்தபடி வைதுகொண்டிருந்தாள். மறு நிமிஷம் சங்கர அய்யரும் அவர் சம்ஸாரமும் வெளியே வந்தார்கள். பின் கேட்க வேண்டுமா?

இவர்களுக்குள் வார்த்தைகள் பலத்தன. தெரு ஜனங்களில் சிலர் ராமய்யர் பக்கமும், சிலர் சங்கர அய்யர் பக்கமும்

சேர்ந்து கொண்டார்கள். இப்படியாக கக்ஷிகள் வலுவடைந்து, அதன் பயனாக, மறுநாள் கோர்ட்டில் பிராது கொடுத்தார் ராமய்யர். ஒரு வாரம் கேஸ் நடந்தது. அதன் பயன், ராமய்யருக்க 200 ரூபாயும், சங்கர அய்யருக்கு 100 ரூபாய் வரையிலும் செலவு ஏற்பட்டது. கிச்சுவின் மேல் எவ்வளவு உயிரோ, அவ்வளவு பணத்தின் மேலும் உயிர் ராமய்யருக்கு. அவர் மனம் வந்து இதுவரையிலும் ஒருவருக்காவது ஒரு தம்பிடி கூடக் கொடுத்ததில்லை. பாவம், அவர் வயிற்றில் தீ யிட்டது போலாயிற்று. அன்று முதல் அவரும், சங்கர அய்யரும் ஜன்ம விரோதிகளாயினர்.

கேஸ் நடந்த மறு நாளே கிச்சுவை, அவன் மாமா, தன் ஊருக்கு கூட்டிக் கொண்டு போனார். ஒரு மாதம் கழித்து, பள்ளிக்கூடம் திறந்ததும் சிச்சு வந்தான். காலை மணி 9 இருக்கும். ராமய்யர் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு, ஜபம் செய்துக் கொண்டே ஜல பாத்திரத்துடன் தெருவில் வந்துக் கொண்டிருந்தார். சங்கர அய்யரோ, தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, குடையும் கையுமாக, ஆபீஸுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார். "நானும், சிண்டுவும் பாஸ்" என்று கரகோஷத்துடன் கை கோர்த்துக் கொண்டு ஓடி வந்தான் கிச்சு. அக் காட்சியைக் கண்டதும் ஜல பாத்திரத்தை திண்ணையில் வைத்துவிட்டு மூக்கின் மேல் விரலை வைத்தார் ராமய்யர். தலை குனிந்த வண்ணம் சென்றார் சங்கர அய்யரும். குழந்தைகள் என்ன இருந்தாலும் குழந்தைகள் தானே? அவர்களுக்கேது துவேஷமும் பகையும்? அவைகளெல்லாம் பெரியவர்களான நமக்கு உரிமைப் பட்டவைகளல்லவா?

---


# பாரத மணி

தமிழ் நாட்டின் இனிய வாரப் பத்திரிகை

**வருஷச் சந்தா :—**

உள்நாடு ரூ. 4 } தபால் செலவு உள்பட
வெளிநாடு ரூ. 6 }

தனிப்பிரதி விலை 1 அணா




## ஹிட்லரின் ஜெர்மனி

ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரம் ஆரம்பித்து சில வருஷங்கள்தான் ஆகப்போகின்றன. ஆனால் இந்த வருஷங்களில் ஜெர்மனியில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் பொருளாதார சமூகப்புனருத்தாரணத் திட்டங்கள் புரட்சிகரமாக இருப்பதைப் பார்க்கும்போது, ஹிட்லரும் அவரது சகாக்களும் உலகத்தின் நிர்மாண ராஜதந்திர சரிதையில் ஒப்பற்ற ஸ்தானம் வகிக்கும் யோக்கியதை அடைந்து விட்டார்கள் என்று கூறலாம். இன்று ஜெர்மனியில் நடந்து கொண்டிருப்பது சமூகப்புரட்சியே தவிர வேறல்ல. ஹிட்லருடைய பொருளாதாரக் கொள்கையாலும் முறையாலும் அதிகலாபமும் உத்சாகமும் பெறக்கூடியவர்களாகிய மக்களைத் தவிர வேறொருவருமில்லை. ஏனென்றால், அவர்கள்தான் வாழ்க்கை மதிப்பை முற்றிலும் புரட்சிகரமாக அமைப்பதெப்படி என்று அறிய முனைந்திருக்கிறார்கள்.

ஹிட்லரின் ஆத்மாவை விகசிக்கச் செய்யம் ஊக்கம்தான் ஜெர்மனியின் போக்கு வரத்து சாதனங்களை சக்தி வாய்ந்த முறையில் புனருத்தாரணம் செய்யக் காரணமாயிருந்தது. சில காலமாக நிலவியிருந்த "இரண்டாவது தொழிற் புரட்சி" சீக்கிரத்தில் முடிவடைய இது உதவிசெய்தது. மோட்டார் தொழிலில் ஜெர்மனியில் ஒரு சதுர மைலுக்கு எவ்வளவு மோட்டார் இருக்கிறது? ஜனத்தொகைப்படி எவ்வளவு இருக்கிறது என்று கணக்குப் போட்டால் பிரான்ஸ் இங்கிலாந்து இவைகளை விட ஜெர்மனி பிற்போக்கான நிலைமையில் இருந்தது. ஆனால் ஹிட்லரின் ஆட்சி இந்த பிற்போக்கை ஒழித்து பிரான்ஸ், இங்கிலாந்து தேசங்களிலுள்ள மக்கள் அளவுக்கு ஜெர்மானியரையும் உயர்த்தி விட்டது. ஜெர்மனியில் இப்போதுள்ள 6,50,000 மோட்டாருக்குப் பதிலாக 3,000,000 மோட்டார்களையும் லாரிகளையும் சிருஷ்டித்து விடுவது என்பது தான் அந்தச் சட்டம்.

1933-ம் வருஷம் நிறைவேற்றிய ஓர் சட்டப்படி, ஒரு மனிதனோ அல்லது கம்பெனியோ எப்பொழுது பழைய இயந்திரங்களுக்குப் பதிலாகஸ்வதேசி இயந்திரங்களை அமைக்கிறானோ அப்பொழுது அவற்றிற்குப் பொது வரி போடப்படமாட்டாது. ஆனால் அப்படி இயந்திரங்கள் அமைப்பதால் தொழிலாளர்களை வேலையை விட்டு தள்ளித் விடுவதென்பது கூடாது. இந்தச் சட்டத்தால் தொழிலுக்கும் விவசாயத்துக்கும் வேண்டிய சாமான்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளுக்கு வியாபாரம் பெருகியிருக்கிறது

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதுதான் மேற்சொன்ன சட்டத்தின் முக்கிய ஷரத்துகளில் ஒன்றின் நோக்கம். பொதுக் கட்டிடங்களையும் மாதா கோவில்களையும் பழுது பார்க்கும் வேலையை நகரங்களும், மாகாண சர்க்கார்களும் ஆஸ்பத்திரி அதிகாரிகளும், மதசபைகளும் செய்யலாம். வட்டியில்லாமல் மத்திய அரசாங்கம் அவைகளுக்குக்கடன் கொடுக்கிறது. வருஷத்தில் ஐந்து தடவையாகக்கடன்வாங்கிக் கொள்ளலாம். கீழ்க்கண்ட நாலு கார்யங்களுக்காகக் கூட கடன் கொடுத்துதவப்படுகிறது. முதலாவதாக, நகரங்களுக்கும் பட்டணங்களுக்கும் வெளியே சிறிய குடியேற்றங்களை அமைக்க; இரண்டாவதாக கிராமாந்திரங்களில் விவசாயிகளின் குடும்பங்களை குடியேற்ற; மூன்றாவதாக, ஜனங்கள் சௌகரியத்திற்காக காற்று, நீர், மின்சார வசதிகள் செய்து கொடுக்க; நான்காவதாக, ஆற்றுப் பாசனங்களை ஒழுங்கு படுத்தவும் நிர்வகிக்கவும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதென்றால் மத்திய சர்க்காருக்கு ஏராளமான செலவு பிடிக்கும். சுமார் 1,000,000,000 ரூபாய்கள் பல வழிகளிலும் செலவு செய்ய மத்திய சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

மேற்சொன்ன தொகையை ரொக்கமாகக் கொடுத்ததாகவோ அல்லது கரன் வி நோட்டாகக் கொடுத்ததாகவோ எண்ணக் கூடாது. மத்திய சர்க்கார் (தொழில்—நோட்டுகள்) என்று வெளியிடுகிறார்கள். அந்த நோட்டுகள் சர்க்காரிடம் வந்தால் ரொக்கம் கிடைக்கும். இந்த 'தொழில்—நோட்டுகள்' ஒரு வருஷத்திலிருந்து ஐந்து வருஷம் வரையில் செல்லுபடியாகும். ஒவ்வொரு நோட்டிலும் எவ்வளவு வருஷம் செல்லுபடியாகும் என்பது அதிலேயே கண்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷம் எவ்வளவு ரூபாய் தாங்கள் கொடுக்கவேண்டுமென்று சர்க்காருக்குத் தெரியும். வேலையில்லாதோர் இன்ஷ்யூரென்ஸ் குறைவதால், வரும்படியை விட செலவு குறைவாகவே இருக்குமென்று நம்புகிறார்கள்.

இந்த 'லேபர் நோட்டுகள்' 'கமர்ஷியல் பில்'களுக்கு உள்ள எல்லா உரிமைகளையும் அனுபவிக்கும். அவைகளைக்கொண்டு சாமான்கள் வாங்கியதற்கு வரிசெலுத்தலாம். கடன் கொடுப்பவர்கள் லேபர் நோட்டுகளை ஒப்புக்கொள்ளவேண்டும். மற்ற எல்லா மாற்று 'பில்களையும்' 'டிஸ்கௌண்ட்' செய்வது போலவே இவற்றையும் "ரீச் பாங்கு" செய்யும். —அமிர்த ஸந்தேஷம்.

## தேசீயத் திட்டக் கமிஷன்

தேசீயத் தொழிலபிவிருத்தி திட்டக் கமிஷன் அங்கத்தினர்களுக்கு தலைவர் ஜவஹர்லால் நேரு சமர்ப்பித்திருக்கும் குறிப்பில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். விவசாயம் இதுவரை இந்தியாவின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது; இருக்கப் போகிறது. அதன் அபிவிருத்தியால் தான் தேசத்தின் செல்வம் வளர இடமிருக்கிறது. இந்த விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வகை தேடாமல் மற்ற தொழில்களில் கவனம் செலுத்துவது உபயோகமற்ற வேலையாகும். எழுபது லக்ஷம் கிராமங்களிலுள்ள பாமர மக்களுக்கு விவசாயத்தால் வருமானம் கிடைக்குமேயொழிய மோட்டார் உற்பத்தி செய்வதாலே அல்லது தொழிற்சாலைகள் அதிகமாவதாலோ நேரடியான பிரயோஜனம் இல்லை. ஆனால் தொழில்கள் வளர்வதனால் நம்நாட்டு ஐசுவர்யம் வெளிநாடுகளுக்குப் போகாமல் இங்கேயே தங்கி புரண்டு கொண்டிருக்கும். அதனால் 'வாழ்க்கை நிலை' உயரும். அதனால் குடியானவனும் சுகப்படுவான் என்பது உண்மை. எனவே, தொழில்களை அபிவிருத்தி செய்வற்றிதைப்படும் அதற்காக திட்டங்களை வகுப்பதைப்பற்றியும் நமக்கு சந்தோஷம்தான்.

குடியானவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக ஓரடியாகப்பயன் தரத்தக்க திட்டங்களை அமைக்க வேண்டியதன் அவசியத்தைத் தான் இங்கே வற்புறுத்துகிறோம். முக்கியமாக, விவசாயத்தை லாபம் தரத்தக்க தொழிலாக சாஸ்திரிய முறையில் எப்படி நடத்துவதென்பதை கமிஷன் ஆராய்ந்து எடுத்துக்கூற வேண்டும். பிறகு அயல் நாடு அரிசிப் போட்டியைத் தடுப்பதற்கும் நிலவரியைக் குறைக்கவும் முயற்சிகள் செய்ய வேண்டும். அப்புறம், விவசாயிகளுக்குப் பண உதவி, போக்குவரவு சாதனம், மார்க்கட் வசதி தண்ணீர் வசதி, முதலிய எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றன. இவைகளெல்லாவற்றையும் கமிஷன் ஆராய்ந்து முடிவிற்கு வருமென்று நம்புகிறோம். விவசாய சப் கமிட்டியின் வேலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கிராம சம்பந்தமான விஷயங்களில் ஞானமுள்ள பல அதிகாரிகளின் ஒத்துழைப்பை அக்கமிட்டி பெறவேண்டும். அதற்கான முயற்சிகளை உடனே செய்யுமென்று நம்புகிறோம்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமக் கைத்தொழில்களின் அவசியத்தை ஜவஹர்லால் வற்புறுத்துகிறார். கிராமக் கைத்தொழில்கள் பிரதேசவாரியாக மாறுபட்டிருக்கின்றன. பலதிறப்பட்ட கைத்தொழில்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் செழித்திருக்கின்றன. அப்படிப்பட்ட கைத்தொழில்களின் எதிர்கால வளர்ச்சியைப் பற்றிக்கவனிக்க வேண்டும். நாம் எதிர்காலத்தில் இயந்திரத் தொழில் வளர்ச்சிக்காக எந்தத் திட்டம் போட்டாலும் கைத்தொழில் பிரச்னையை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். இயந்திரத் தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் நம் தேசத்தில் போட்டி ஏற்பட்டால அதனால் கைத்தொழில் மிகவும் பாதிக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட நிலைமை வந்தால் விவசாயிகள் இதுவரை தங்களுக்கு உபவருமானத்தைக் கொடுத்து வந்த சாதனத்தை இழப்பார்கள். எனவே, இயந்திரத் தொழில் வளர்ச்சி கிராமவாசிகளைப் பாதிக்கிறது. ஆனால் கிராமவாசிகள் இந்திய பொருளாதார சமூகத்தில் வசிக்கும் நிலையில் அவர்கள் பொருளாதாரம் பாதிக்கப்படலாமா என்பதுதான் கேள்வி. கிராமப் பொருளாதாரம் பாதிக்கப்படாமல், பட்டணத்தின் பொருளாதாரம் பலமடையவும், தொழில் வளர்ச்சி பெருகவும் தேசீயத் திட்டக் கமிஷன் ஓர் சரியான முறையை ஆராய்ந்து முடிவுக்கு வருமென்று நம்புகிறோம்.



ராதா கிருஷ்ணாவில் லக்ஷ்மீ தேவி

*Edited & Published by K. S. Venkataramani, at No. 312, Thambu Chetty Street, Madras, and Printed by T. K. Venkatesan, at The Jupiter Press, 16, Sembudoss Street, G.T., Madras.*

# BOOKS

*By*
**K. S. VENKATARAMANI**

## JUST PUBLISHED

| | Rs. As. |
|---|---|
| 1. **A Day with Sambhu** (In Hindi) ... | 0 3 |

| | Rs. A. |
|---|---|
| 2. **Jatadharan & other Stories** (A collection of Short stories) ... | 1 8 |
| 3. **Kandan, The Patriot** (A Novel of New India in the making) Second Edition (Revised and Enlarged) | 2 0 |
| 4. **Renascent India** (A Study of Indian Problem) Third Edition | 1 0 |
| 5. **A Day with Sambhu** (Talks to a Boy) (In English. Second Edition) | 0 8 |
| 6. **The Next Rung** (A Constructive Study of Modern civilisation) Second Edition ... | 1 0 |
| 7. **Murugan, theTiller** (A Novel of Indian Rural Life) Third Edition | 2 0 |
| 8. **On the Sand-Dunes** (Musings of Life in Free Verse) Second Edition | 1 0 |
| 9. **Paper Boats** (Sketches of Indian Village life) Fourth Edition ... | 1 0 |

*Booklets :*

| | |
|---|---|
| 1. **The Indian Village** (A Ten-Year Plan) ... | 0 8 |
| 2. **Dr. Annie Beasant** A Tribute ... | 0 4 |

| | Rs. A |
|---|---|
| **High Ways of Astrology** By Kumbha. Second Edition ... | 1 8 |
| **Venkatramani:** Writer and Thinker By Manjeri S. Isvaran ... | 0 8 |

*In Tamil :*

| | |
|---|---|
| 1. **Kandan, The Patriot** (By the Author himself) ... | 1 0 |
| 2. **Murugan The Tiller** By Krishna Kumari (M. L. J. Office, Mylapore) | 1 8 |
| 3. **The Indian Village** (By the Author himself) ... | 0 2 |

*In Telugu :*

| | |
|---|---|
| 1. **Murugan, The Tiller** By P. Ramabrahmam (Andhra Patrika Office, Madras) ... | 1 8 |
| 2. **Kandan, The Patriot** (Ramaswami Sastrulu & Sons, Madras) ... | 1 4 |
| 3. **A Day with Sambhu** (Ramaswami Sastrulu & Sons, Madras) ... | 1 4 |

*In Sanskrit :*

| | |
|---|---|
| 1. **A Day with Sambhu** By Y. Mahalinga Sastri ... | 0 4 |

## *SOME OPINIONS*

1. Mr. Venkataramani writes beautifully about Indian village life. I have read books of his for some years and now "Paper Boats" is in its third edition. Charming and accurate descriptions: attractive essays.—HAMILTON FYFE in *The Daily Chronicle.*

2. Mr. Venkataramani is a Village prose-poet. He frames a political programme while he plays the lyre.—*The Literary Guide.*

3. An Indian who writes with rare charm and sympathy about his own people.—J. A. SPENDER in *The Changing East.*

4. One of the foremost writers of India; an Indian Thinker.—*Public Opinion.*

The following books have been approved for Library use by the Madras Text-Book Committee: Vide Fort St. George Gazette (Part IB) Supplement dated 2nd June 1936. (Consolidated list of approved books).

*Approved for Library use :—*

| *English* : | Vide page of the Ft. St. George gazette | | Rs. A. |
|---|---|---|---|
| Paper Boats | 57 | ... | 1 0 |
| A Day with Sambhu | 57 | ... | 0 8 |
| The Indian Village | 53 | ... | 0 4 |
| *Tamil* : | | | |
| Our Village Life | 155 | ... | 0 2 |
| *Sanskrit* : | | | |

*Approved for Class use :—*

| | | | |
|---|---|---|---|
| Sambhu-Caryopadesa By Y. Mahalinga Sastri | 215 | ... | 0 4 |

**SVETARANYA ASHRAMA, 312, Thambu Chetty Street, Madras.**

# இண்டோ-லங்கா இன்ஸ்யூரன்ஸ்

## கம்பெனி, லிமிடெட்.

11/12, வடக்கு பீச்சு ரோட், மதராஸ்.

ஸ்தாபிதம்—1923.

(கவர்ண்மெண்டுக்கு ஜாமீன் செலுத்தியுள்ளது)

—o—

இக்கம்பெனியில் ஏஜண்டுகள் பெறும் சலாக்கியம் :—

1. மற்றெந்த கம்பெனியிலும் கமிஷன் அதிகம்.

2. ஏஜண்டு இறந்தாலும் அவர் வாரிசுக்கு ஏஜன்ஸி கிடைக்கும். அவரின் கமிஷனும் பெறலாம்.

3. ஆகையால் ஒரு ஏஜண்டு ஸ்தாபிதஞ் செய்ய எடுத்த சிரமம் வீண் போகாது.

4. இக்கம்பெனி முற்றிலும் இந்திய கம்பெனி. பொதுமக்களை இன்ஸ்யூர் செய்யவே நிர்வகிக்கப் பெற்றுள்ளது.

5. பிரிமியம் — மிகவும் சொற்பம். மாதம் ரூபாய் 2/- தொடங்கி 10 வரையும் கட்டலாம்.

6. ரூபாய் 125/- தொடங்கி ரூபாய் 500/- வரையும் இன்ஸ்யூர் செய்யலாம். உபகாரத் தொகை 1000/-க்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 20/- தொடங்கி 50/- வரையும் பெறலாம்.

7. ரூபாய் 4 லக்ஷம் உபகாரத் தொகை கொடுத்துள்ளது. பொதுமக்களுக்கு ஏற்ற கம்பெனி இது ஒன்றே. இன்றைக்கே ஒரு பாலிஸி எடுப்பது உத்தமம்; நாளை என்று தவணை போட்டால் தருணம் போய்விடும்.

8. இன்ஸ்யூர் செய்து கொள்ளுதல் யாவருக்கும் ஜீவியத்தின் கடமையாகிறது. செய்யாவிடின் பின் ஜீவியத்தில் கஷ்டத்தை தரும்.

9. வயோதிக தாபரத்துக்கு என்று தினம் அணா 1/- அல்லது 2/- சேகரித்து பிரிமியம் செலுத்தி இண்டோ/லங்காவில் ஒரு பாலிஸி இன்றே எடுத்துக் கொள்ளுங்கள்.